Registered at the G P. O.as a Newspaper    வாரப் பதிப்பு    விலை சதம 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily
தபாற் பெட்டி எண் 48
போன். 389

மலர் 6    யாழ்ப்பாணம்    குரோதி சித்திரை 21ஆம் நாள    துல்ஹஜ பிறை 20    (3-5-64)    ஞாயிற்றுக்கிழமை    இதழ் 82

பாவனைக்குச் சிறந்தது
டொலர் மார்க்
அலுமினியப் பாத்திரங்கள்



டொலர் கோர்ப்பரேஷன்
14-டாம் வீதி கொழும்பு

தமிழ்நாடு முதன் மந்திரி

# பக்தவத்சலத்துடன் சிவசிதம்பரம் பேச்சு

## இலங்கை - இந்தியர் பிரச்னை குறித்து விவாதித்தனர்

### தி. மு. க. தலைவர்களையும் சந்தித்தார்

நல்லூர் ஞாயிறு

"இலங்கை இந்தியர் பிரச்னைக்கு தீர்வுகாண இந்திய அரசாங்கத்தை வற்புறுத்தும்படி சென்னை முதன் மந்திரி திரு. எம். பக்தவத்சத்திடம் உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் கேட்டுள்ளார். தென்னிந்தியாவுக்கு விஜயம் செய்த திரு. மு. சிவசிதம்பரம் சென்னை முதன்மந்திரியுடன் அண்மையில் நடத்திய பேச்சுவார்த்தைகளில், இலங்கை - இந்தியர் நிலைமை பற்றி விரிவாக எடுத்துரைத்துள்ளார். இலங்கையில் இந்திய வம்சாவழியினர் படும் துயரங்களை கேட்டு வருத்தம் தெரிவித்த சென்னை முதன் மந்திரி, இது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்துடன் ஆலோசனைசெய்வதாக வாக்குறுதி அளித்துள்ளார். திரு. மு. சிவசிதம்பரம், திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர்களையும் சந்தித்து பேச்சுக்கள் நடத்தினர்.

கடந்த இரு வாரங்களாக தென்னிந்தியாவில் சுற்றுப்பிரயாணம் செய்த உடுப்பிட்டி எம். பி. திரு. மு. சிவசிதம்பரம், 'ஈழநாடு' நிருபருடன் நடத்திய பேட்டியில் தென்னிந்திய அரசியல் தலைவர்களுடன் அவர் நடத்திய பேச்சுக்கள் பற்றி விரிவாக விளக்கினர்:

சென்னை முதன்மந்திரி திரு. எம். பக்தவத்சலம், சென்னை மேயர் திரு. கிருஷ்ணமூர்த்தி, திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்களான நாஞ்சில் கே. மனோகரன் இளஞ் செழியன் ஆகியோரை திரு. சிவசிதம்பரம் சந்தித்தார்.

அடுத்த பொதுத்தேர்தலில் தமிழ்நாடு ஆட்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் கைக்கு கிடைக்கக் கூடிய சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும் திரு. சிவசிதம்பரம் நமது நிருபருக்கு கூறினர்.

தமிழ்நாடு முதன் மந்திரியைச் சந்தித்த திரு. சிவசிதம்பரம் அவரிடம் இலங்கையிலுள்ள இந்தியர்களுக்கெதிராகப் பிறப்பிக்கப்பட்டுள்ள இருசட்

(10-ம் பக்கம் பார்க்க)

## நேரு–ஷேக்அப்துல்லா பேச்சு: திட்டவட்டமான முடிவில்லை

புதுடில்லி, மே. 2

பிரதமர் நேருவுடன் பேச்சுக்கள் நடத்தும் திரு. ஷேக் முகம்மது அப்துல்லா நேற்று நிருபர்களிடம் பேசுகையில்; பிரதமர் நேருவிடம் தாம் நடத்தும் பேச்சுக்களில் திட்டவட்டமான முடிவுகள் எதுவும் ஏற்படவில்லையென்று கூறினர்.

திரு. ஷேக் அப்துல்லா நேற்று திரு. லால்பகதூர் சாஸ்திரி, உப ராஷ்டிராதிபதி டாக்டர் ஸாகீர் ஹுஸைசன், இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் ஆகியோரையும் சந்தித்தார்.

பாகிஸ்தான் வரும்படி விடுக்கப்பட்ட பாக். அழைப்பை ஏற்றுக்கொண்ட ஷேக் அப்துல்லா உகந்த தருணம் வரும்போது அங்கு செல்வாரெனத் தெரிய வருகிறது.

## காஷ்மீர்பிரச்னைக்கு தீர்வு ஏற்படும்

### அயூப் நம்பிக்கை

ராவல்பிண்டி, மே. 2

காஷ்மீர் பிரச்னை குறித்து விவாதிக்கும் பொருட்டு மீண்டும் கூடும் ஐ. நா. சபை, இம்முறை இப்பிரச்னையில் தீர்வொன்றைக்காணும் என்று பாகிஸ்தான் அதிபர் அயூப்கான் அறிவித்துள்ளார்.

இம் மாதம் 5-ம் திகதி கூடும் ஐ. நா. பந்தோபஸ்து சபை, காஷ்மீர் பிரச்னை சம்பந்தமாக தீர்வுகாணும் தீர்மானமொன்றைநிறைவேற்றும் என்றும் அதிபர் அயூப்கான் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

கட்டாய உத்தரவு

## வாபஸ் பெருவிட்டால் எதிர் நடவடிக்கை

### "தொடர்ந்து வழங்கப்பட்டால் போராட்ட நிலை உருவாகும்"

நல்லூர், ஞாயிறு

"சிங்களத்தில் தேர்ச்சியடையாத தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள கட்டாயஓய்வு உத்தரவு இம்மாத இறுதிக்குள் வாபஸ் பெறப்படாவிட்டால் அதனை எதிர்த்து அரசாங்க எழுதுவினைஞர் சங்கம் நடவடிக்கை எடுக்கவிருக்கின்றது. அரசாங்கத்தின் நடவடிக்கையை அவதானித்து எழுதுவினைஞர்சங்க செயற்குழு விரைவில் மேற்கொண்டு செயலில் இறங்குமென எழுதுவினைஞர் சங்கப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

தமிழ் ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுவரும் கட்டாய உத்தரவு ரத்துச் செய்யப்படாமல் மேலும் உத்தரவுகள் வழங்கப்படுவது தமிழரசுக் கட்சி வட்டாரங்களிடையே பெருங்கவலையை உண்டுபண்ணியுள்ளது.

வெள்ளிக்கிழமைநடைபெற்ற மேதினக் கூட்ட மொன்றில் வட்டுக்கோட்டை எம். பி. திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் 'கட்டாய ஓய்வு உத்தரவுகள்' மேலும் வழங்கப்பட்டுவருமானால் மீண்டும போராட்டத்தை ஆரம்பிக்க வேண்டிய நிலை உருவாகக் கூடுமெனத் தெரிவித்தார்.

அரசாங்க எழுது வினைஞர் சங்கம் அரசாங்கத்திற்கெதிராகத் தாக்கல் செய்துள்ள இரு வழக்குகளும் இம்மாதம் 29-ம் திகதி கொழும்பு மாவட்ட நீதி

(10-ம் பக்கம் பார்க்க)

அமெரிக்க

## விஞ்ஞான திரைப்படங்கள் நாளை யாழ்ப்பாணத்தில் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அமெரிக்க விஞ்ஞான அரங்க திரைப்படங்கள் நாளையும் மறுதினமும் யாழ்ப்பாணத்தில் நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணக்கல்லூரியில் மாலை 6 30 க்கு ஆரம்பமாகும் முதல் நாள் நிகழ்ச்சிகளை மேயர் திரு. டி. எஸ். துரைராஜா தொடக்கி வைப்பார். நிகழ்ச்சிகளுக்கு தலைமை வகிக்கும் இலங்கை பல்கலைக்கழக பேராசிரியா டாக்டர் ஏ. சின்னத்தம்பி, இங்கு வரும் அமெரிக்க விஞ்ஞானிகளை அறிமுகம் செய்து வைப்பார். நாளையும், மறுநாளும் யாழ். இந்துக்கல்லூரி, பலாலி ஆசிரியர் பயிற்சிக்கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றிலும் விஞ்ஞான திரைப்படங்கள் காண்பிக்கப் படும்.

பூக்கள் மலர்வது. ஒளியின் ஜாலவித்தைகள், நீரின் விளையாட்டுகள், காற்றின் அற்புதச் செயல்கள், கடலின் அடியில் காணும் அதிசயங்கள் ஆகியவற்றுடன் பல அதிசயங்களை அமெரிக்க விஞ்ஞான திரைப்படக் கழகம் நமக்கு காண்பிப்பார்கள். மனிதனின் உறுப்புக்களையும், உறுப்புக்களை உண்டாக்கும் ஜீவ அணுக்களையும் தந்திரக்காட்சிகள் மூலம் விளக்கப்படும். இத் திரைப்படங்கள், விஞ்ஞான அறிஞர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பொதுமக்கள் எல்லோருக்குமேற்ற அறிவுவிருந்தாகும்.

புகையிலை - மிளகாய் - கத்தரி - முந்திரிகை முதலிய பயிர்களில் உண்டாகும்
சுருணைகளையும் புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
பொலிடோலுடன்--மெற்றசிஸ்ரொக்ஸ்
FOLIDOL    METASYSTOX
கலந்து நாற்று மேடையில் இருந்து பாவிக்கத் தொடங்கவும்
PHONE 397 JAFFNA    ROYAL DISPENSARY    T'GRAMS ROYAEL

# இந்த வாரம் உங்கள் இராசி பலன் எப்படி?

"அத்திரி" எழுதுகிறார்

[3-5-1964 தொடக்கம் 9-5-1964 வரை]

## மேடம்

(அஸ்வினி, பரணி, கார்த்திகை 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரம் பொதுவாக நன்மையாக இருந்தாலும் குடும்பத்தில் திடீர் செலவுகள் ஏற்படுவதற்கு இடமுண்டு. சாமர்த்தியமாகச் சமாளிக்கும் வாய்ப்பையும் பெறுவீர்கள். உடல்நலம் சுமாராக இருந்தாலும் அற்ப சுகவீனங்கள் அடிக்கடி ஏற்படும். குடும்பத்தில் பலவிதமான சந்தோஷங்கள் ஏற்படும் சனிக்கிழமையளவில் எதிர்பார்த்த சில பணங்கள் வந்துசேரும். தொழிலிலிருந்த பல சிக்கல்கள் நீங்கி சுமுகமாக தொழில்நடைபெற வசதிகள் ஏற்படும். வெள்ளிக்கிழமையில் கொடுக்கல் வாங்கல் செய்வது நன்மையல்ல.

## இடபம்

(கார்த்திகை 2,3,4-ம் பாதங்களிலும் ரோகிணி,மிருகசீரிடம் 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் அதிக வரும்படியில்லாவிட்டாலும் செலவினங்களும் அதிகமிராது. பணநெருக்கடியும் அதிகமிராது. மற்றவர்களுடன் கூட்டுத்தொழில் செய்பவர்களுக்கு இந்த வாரம் மிகவும் அநுகூலமாயிருக்கும். இந்த இராசியில் பிறந்த பெண்கள் தங்கள் தேகசுகத்தைக் கவனமாகப் பேணவேண்டும். நீங்கள் எதிர்பார்த்த கடிதமொன்று தாமதத்தில் வந்து சேரும். பலவிதமான பிரச்னைகளைத் தீர்ப்பதற்கு உங்கள் மத்தியஸ்தத்தை மற்றவர்கள் விரும்பினாலும் நீங்கள் தலையிடக்கூடாது.

## மிதுனம்

(மிருகசீரிடம் 3,4-ம் பாதங்களிலும், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இந்த வாரம் நீங்கள் எதிர்பாராத அலைச்சல்கள் ஏற்பட்டாலும் காரிய சாதனைகள் ஏற்படும். எந்தவிதமான எதிரிகளும் உங்களுடைய மனக்கசப்பை விரும்பமாட்டார்கள். நீங்கள் தலைப்போடும் பொதுக்காரியங்கள் உங்களுக்கு நல்ல பெயரையும் கீர்த்தியையும் வாங்கித் தரும். வாகனங்களில் செலவிடும் இந்த இராசிக்காரர்களுக்கு இந்த வாரம் மிகவும் அநுகூலமாயிருக்கும். பிரயாணங்களினால் மனதிற்கு நிம்மதியும் சந்தோஷமும் ஏற்படும்.

## கடகம்

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம், ஆயிலியத்தில் ஜனனமானவர்களுக்கு) குடும்பச் செலவுகள் உங்கள் சக்திக்கும் மீறி நிற்கும். எதிர்பாராத செலவுகள் ஏற்படுவதினாலும் சுகவீனங்கள் ஏற்படுவதினாலும் நிலைமையைச் சமாளிக்க முடியாமல் திணறுவீர்கள். பழைய கடன்களைத் தீர்க்க முயற்சிக்கும் உங்களுக்கு புதிய கடன்களும் ஏற்பட்டு மனநிம்மதியைக் குறைக்கும். வீண்பேச்சுவார்த்தைகளினால் தொல்லைகளும் சண்டைகளும் உறவினர்களுக்குள்ளே ஏற்படப் பார்க்கும். விரும்பாவிட்டாலும் உங்களை வலுச்சண்டைக்கு உறவினர்கள் இழுப்பார்கள்.

## சிங்கம்

(மகம், பூரம், உத்திரம் 1-ம் பாததத்தில் ஜனனமானவர்களுக்கு) நீங்கள் எதிர்பாராத வகையில் உறவினர் ஒருவரின் பெருந் உங்களுக்கு வந்து சேரும். நீங்கள் பெருமைப்படக்கூடிய வகையில் உங்கள் குடும்பத்தினர் உங்களுடன் நடந்து கொள்ளுவார்கள். மனஞ்சலித்துப் போய் கைவிட்ட காரியமொன்று இந்த வாரம் கைகூடும். புதன்கிழமையளவில் ஒரு முக்கிய விருந்தாளி உங்களை நாடி வருவார். அவருடைய வருகையினால் உங்கள் வாழ்க்கையில் ஒரு நல்ல மாற்றம் ஏற்படும். செலவினங்கள் அதிகமிருந்தாலும் பணவருவாயும் சுமாராக இருக்கும்.

## கன்னி

(உத்திரம் 2, 3, 4-ம் பாதங்களிலும், அத்தம், சித்திரை 1, 2-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) வாகனங்களுடன் ஊசாடும் இந்த இராசிக்காரர்கள் இந்த வாரத்தில் பல கஷ்ட நஷ்டங்களை அனுபவிக்க நேரிடும். நீங்கள் ஆரம்பத்தில் போட்ட பணங்களுக்குத் தகுந்தபலனைக் காணமாட்டீர்கள். கணவன் மனைவிக்குள் இந்தவாரம் வீண் மனஸ்தாபங்கள் ஏற்படக்கூடும். வரவுக்கு மிஞ்சிய செலவுகளினால் நிம்மதிக் குறைவு ஏற்பட்டாலும் சில எதிர்பாராத பணவருவாயையும் எதிர்பார்க்கலாம். செவ்வாய்க்கிழமையளவில் சில சிறு காயங்கள் ஏற்படக்கூடும்.

## துலாம்

(சித்திரை 3, 4-ம் பாதத்திலும், சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) இடைஇடையே அற்பசுகக் குறைவுகள் ஏற்பட்டாலும் இந்த வாரம் பண வருவாய்க்கு இடமுண்டு. நீங்கள் விரும்பியபடி சுகம் அனுபவிக்க இந்தவாரம் மிகவும் அநுகூலமாயிருக்கும். எந்தவிதமான சூழ்நிலையிலும் நீங்கள் மனம் தளராமல் நிம்மதியாயிருப்பீர்கள். நீங்கள் முன்கொடுத்தபொருளொன்று சேதமடைந்த நிலையில் வார இறுதியில் உங்களுக்கு வந்து சேரும். பெரியோர்களின் வார்த்தைகளுக்கு மதிப்புக் கொடுத்து நடந்தீர்களானால் பலவிதமான நன்மைகள் ஏற்படும்.

## விருச்சிகம்

(விசாகம் 1, 2, 3 -ம் பாதத்திலும், அனுஷம், கேட்டையிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு கடன் தொந்தரவுகள் நிம்மதியைக் குறைக்கும். எவ்வளவு செலவுகளிருந்தாலும் வரவுக்கும் இந்த வாரத்தில் இடமுண்டு. ஆனால் வரவுக்கு மிஞ்சிய செலவினங்கள் உங்களை கடன் வாங்கும் நிர்ப்பந்தத்தில் கொண்டு போய்விடும். நீங்கள் பிரயாசைப்பட்டு முயற்சி செய்த காரியமொன்று இந்தவார இறுதியில் கைகூடும். குடும்பத்தில் ஒருவருடைய சுகவீனத்தால் அலைச்சல் ஏற்படும். எந்த நிலைமையையும் பொறுமையாகச் சகிக்கக்கூடிய மனநிலையைப் பெறுவீர்கள்.

## தனுசு

(மூலம், பூராடம், உத்திராடம் 1-ம் பாதத்தில் ஜனனமானவர்களுக்கு) நீங்கள் எதிர்பார்த்த பணஉதவி இந்த வாரத்தில் வந்துசேரும். நீங்கள் முதலீடு செய்த பணத்திற்கு தகுந்த பலன் இந்த வாரத்தில் ஏற்படும். பலகாலமாக இருந்த கடன் தொல்லைகள் சிறிதாக இந்த வாரத்தில் அகலத்தொடங்கும். வியாழக்கிழமையளவில் களத்திரவழியால் பல உதவிகள் வந்து சேரும். பிரயாணங்கள் ஏற்படக்கூடிய சந்தர்ப்பங்கள் வந்து சேர்ந்தாலும் நீங்கள் அவற்றைத் தவிர்க்க முயற்சிப்பீர்கள். பிரயாணங்களினால் சில அநுகூலங்கள் ஏற்படக்கூடும்.

## மகரம்

(உத்திராடம் 2, 3, 4-ம் பாதங்களிலும், திருவோணம், அவிட்டம் 1,2-ம்பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்கள் குடும்பவாழ்க்கையில் என்றுமேயிராத சில குழப்பங்கள் ஏற்படும், நேரத்திற்கு சாப்பாடு, நித்திரையில்லாமல் அவதியுறநேரிடும் உஷ்ண சம்பந்தமான ரோகங்களிலும் பல்வில்லவலியும் இந்தவாரத்தில் ஏற்படக்கூடும். நெருப்புடன் புழங்கும் இந்த இராசிக்காரர்கள் மிகவும் கவனமாக நடந்து கொள்ளவேண்டும். சனிக்கிழமையளவில் உங்கள் கையைவிட்டு பொருள்கள் போவதற்கு சந்தர்ப்பங்கள் ஏற்படும். எந்த விஷயத்திலும் அவதானமாக நடந்துகொள்ளவும்.

## கும்பம்

(அவிட்டம் 3, 4-ம் பாதங்களிலும், சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம்பாதங்களிலும் ஜனனமானவர்களுக்கு) உங்களுக்கு இந்த வாரத்தில் உடல் சோர்வு ஏற்படும். உங்கள் பொறுமையைச் சோதிக்கத்தக்க முறையில் உங்கள் குடும்பத்தினர் நடந்துகொள்வார்கள். குழந்தைகளின் சுகம் பாதிக்கப்படுவதினால் செலவு அதிகரிக்கப்படும். உங்கள் களத்திரவழியில் ஒருவர் உங்களுடைய உதவிக்கு வருவார். பெண் சகோதரர்கள் உங்கள் உதவியை நாடி வருவார்கள். உங்களுக்கு பொதுத்தர்மச் செலவுகள் இந்த வாரத்தில் அதிகரிக்கும். சனிக்கிழமை உங்களுக்கு அநுகூலமான நாள்.

## மீனம்

(பூரட்டாதி 4-ம் பாதத்திலும், உத்திரட்டாதியிலும், ஜனனமானவர்களுக்கு) இந்த வாரத்தில் பண வருவாய் சுமாராக இருக்கும். எந்த விஷயமும் சுலபமாக முடியக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படும். சுபமான காரியங்களுக்கும் மங்கலமான காரியங்களுக்கும் செலவுகள் ஏற்படும். உடுபுடவை முதலியவற்றில் இந்த வாரம் அதிகம் செலவு செய்வீர்கள். சனிக்கிழமையளவில் வயதில் முதிர்ந்த ஒருவருடைய பொருளுதவி கிடைக்கும் உங்கள் உறவினர் ஒருவருடைய விவாககாரியங்களில் நீங்கள் எடுக்கும் முயற்சி வெள்ளிக்கிழமையளவில் கைகூடும்.

# ஷேக்ஸ்பியர் பாடிய மானிடரின் ஏழு பருவம்

நானிலம் யாவும் ஓர் நாடகசாலையே
ஆண் பெண் அனைவரும் அதில் நடிப்பவர்தாம்
மறைவும் தோற்றமும் மற்றவர்க்கிங்குள்
ஆயுள் நாளில் ஏய பல் வேடம்
எடுத்தவர் புவியில் நடிப்பவர் ஆவர்,
ஒவ்வொரு வருக்கும் ஓரெழு பருவம் ஆம்
கக்கிக் கதறக் கைப்புறத் தேந்திச்
செவிலித்தாய் வளர் சவலைப் பருவமே
பருவங்களில் முதற் பருவ மதாகும்.
தூண்டா நிற்ப, வேண்டா வெறுப்பொடு
புத்தகப் பையொடு நத்தைபோல் ஊர்ந்து
மினுங்கிய வதனம் சிணுங்கிச் சிணுங்கிக்
காலைப் பொழுதிற் கல்விச் கழகம்
மெள்ளச் செல்லும் பள்ளிப்பிள்ளை - பின்
காதலித் திருக்கும் காதலி தனது
புருவமாகிய புழுங்கிய மனத்துடன்
தண்பா மாலை சாற்றித் துதித்து
மட்டிலா உலைபோல் நெட்டுயிர்ப் பெய்தும்
காதல ஞகும் காளை - அதன் பின்
அதிசயச் சபதமும் அடர் புலித் தாடியும்
பேரழியா வகைப் பேணு நல் ஊக்கமும்
எதற்கும் சண்டைக்கு இழுக்கும் படியாச்
சடுதியிற் கோபம் செனிப்பதா உங்கொண்டு
நீர் மேற் குமிழிபோல் நிலையிலாப் புகழ் பெறப்
பீரங்கி வாயில் சீர் அங்கம் போக்கவும்
சித்தமா இருக்கும் யுத்த வீரன் - பின்
செழிப்புறு சேவற் கொழுப்பினுல் ஆகிய
பேரெழில் வாய்ந்த பேழைபோல் 'வயிறும்
நிர்த்தாட் சண்ய நேத்திரம் இரண்டும்
வழங்கும் காலத் தொழுங்கின் படியே
கறுக்கிய தாடியும் முறுக்கிய மீசையும்
நல் உபதேசமும் நாடறி வழக்கும்
இன்ன யாவும் இனிதுறக் கொண்ட
பண்பார் நீதிபதி - அதன் பின்னர்
கச்சல் தேக்மும் கால்களிற் சோடும்
மூக்கிற் றரித்து நோக்கு கண்ணுடியும்
இரு கவுன் தோலாம் இரும்பை வீழ்ச்சியும்
பாவித் தினிது பத்திரப் படுத்திய
மேற் சோடிரண்டும் மிகப் பெரிதாம்படி
ஒடுங்கிச் சுருங்கிய ஓரிரு பாதமும்
ஆணவப் பெருங்குரல் அனைத்தையும் இழந்து
குழவியின் குறுகிய குரலினைப் போன்று
கீச் செண ஒலிக்கும் பேச்சையும் கொண்டு
தேசெலாம் சுன்றிய மாசுலாம் குருபியே
ஆரும் பருவம் ஆம், அதன் பின்னர்
பல்லும் பார்வையும் சொல்லும் சுவையும்
யாவையும் இழந்து யாவையும் மறந்து
மறுவலும் சேய் என மதித்தளர் வெய்துவோன்
அடிக்கடி யாறும் இவ் அற்புத சரிதை
முடியும் இக்காட்சி யொடு முடிந்திடுமே.

("அரும் பொருட்டிரட்டு" என்னும் நூலில் இருந்து திரு. வை. முத்துக்குமாரசுவாமி பி. ஏ. அவர்களால் அனுப்பப்பட்டது)

# சித்திரா பூரணை

(8ம்- பக்கத் தொடர்ச்சி)

ஒருநாள் —

"பீலி! உன் குரல யாழினும் இனியது!" என்ருர்.

"மகரயாழை விடவா...?" என்றேன், நான்; இதைக் கேட்ட அவர்முகம் திடீரெனக் கறுத்தது.

"பீலி! எனக்குப் பேரியாழின் இசை பிடிக்கும்! சகோடயாழின் நாதத்தில் மயங்கிப் போவேன்! செங்கோட்டியாழின் நரம்பிலே நானே இசை மீட்டுவேன்...! ஆனல், மகரயாழை எனக்குப் பிடிக்கவே பிடிக்காது...!"

'ஏன்' என்பது போல அவரைப் பார்த்தேன்; அவர் தொடர்வார்: "மகரம் பாண்டியரின் சின்னம்! என் பரம வைரியாகப் பாண்டியரைக் கருதுகிறேன்!... தமிழராக அவர்கள் இருந்தாலும், அவர்களை அழிக்கக் கங்கணம்நீட்டியுள்ளேன்!... பீலி! உனக்குத் தெரியுமா...? என் சிறிய தந்தை நெடுங்கிள்ளியைப் போர்க்களத்தில் வஞ்சகமாகக் கொன்றவர்கள், இந்த மகரக் கொடியோர்!"...

"அதனுல், கலையின் மீதும் வெறுப்பா?..."

அவர் பேசவில்லை; நானும் பேசவில்லை.

என் விரலில் மகரவாய் மோதிரம் ஒன்று அணிந்திருந்தேன்; அவருக்காக அதையும் கழற்றி எறிந்தேன்.

'இத்தகைய வஞ்சினம் கொண்டுள்ள அவர் பாண்டியரை முறியடிப்பதில் தான் கருத்தாகவிருப்பார். என்னை மறந்துபோயிருப்பார். ஒரு திங்களுள் வந்து மணம் முடிப்பதாகக் கூறினரே...?'

இரவில்நான் துயின்றதே... அப்படித் துயின்றாலும் துர்க்கனவுகள் கண்டு துடித்துப் பதைத்து எழும்புவேன்; அவர் களத்தில் போராடுவது போலவும், குதிரையினின்றும் கீழே வீழ்ந்ததுபோலவும், மார்பிலே வேல்பாய்ந்து துடிப்பது போலவும் கனவுகள் கண்டேன்.

என் தாத்தா பலதடவைகள் சோழநாடுசென்று வந்தார்; போர் முடிந்ததாகவில்லை.

ஒரு திங்கள் கழிந்தது "ஒரு திங்களுள் வந்து என்னை மணக்காவிடில், என்னை உயிரோடு காணமாட்டீர்கள்!" என்று நான் கழிக்கானற் சோலையில் கூறிவந்ததை எண்ணினேன்; சொன்ன சொல்லைச் செயலாக்கவும் முயன்றேன். ஊராரின் அலர் மொழிகேட்டும் நான் ஏன் உயிர்வாழவேண்டும்?

'கோமுகிப் பொய்கையில் வீழ்ந்து தற்கொலை செய்யலாமா?' எனவும் எண்ணினேன். ஒருநாள் வேதனை தாளமாட்டாது, விஷமருந்த முயன்றபோது, அதை எப்படியோ அறிந்த குண்டலினி சமயத்தில் வந்து தடுத்தாள்.

"என்னைச் சாகவிடு, குண்டலா! வேதனையால் நான் அணுவணுவாகச் சாவதிலும், ஒரேயடியாக என்னைச் சாகவிடு, தோழி!"

"தேவி! என்ன காரியம் செய்யத்துணிந்தீர்கள்?... அவர் சொல் தவருதவர்! போர்க்களத்திற்கு அவர் செல்லாதிருந்தல் நிச்சயம் இங்கு வந்திருப்பார்!...போர் முடியும் வரை காத்திருங்கள்!..." என்று கெஞ்சினுள்.

எனக்கும் ஒரு நப்பாசை—போர் முடிந்ததும் அவர் என்னைத் தேடிவந்தால்...?

(அடுத்த இதழில் முற்றும்)

## "அந்தரத் தீவு" அரங்கேற்று விழா

திரு. சே. எஸ். மகேசன் அவர்களின் விஞ்ஞான நவீனமான "அந்தரத் தீவு" நூல் வெளியீட்டுவிழா இம்மாதம் ஏப்ரல் 26-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை வெள்ளவத்தை சைவமங்கையர் கழக மண்டபத்தில் நடைபெற்றது. இலங்கைப் பல்கலைக் கழகப் பௌதிகத் துறைப் பேராசிரியர் ஆ. வி. மயில்வாகனம் இக்கூட்டத்துக்குத் தலைமை தாங்கினர். திருவாளர்கள் எஸ். டி. சிவநாயகம், அருள் தியாகராசா, வி. எம். வைகுந்தநாதன், கசின் சிவகுருநாதன், பேராசிரியர் ஆ. சின்னத்தம்பி ஆகியோர் இந்நவீனத்தின் சிறப்பியல்புகளைப் பற்றிப் பேசினர்கள்.

# பெண் இவளே- பெய்யெனப்பெய்யும்மழை போன்றாள்

— வரணியூர் பண்டித வித்துவான் ஆ. சின்னத்தம்பி —

கற்பு என்பது கற்பித்தவாறொழுகல்; "கற்பெனப்படுவது சொற்றிறம்பாமை" என்றார் பெண் புலமை மூதாட்டி ஔவையார். கற்பைப்பற்றி நச்சினார்க்கினியர் சொல்லுமிடத்து, "கொண்டானிற் சிறந்த தெய்வம் இன்றெனவும் அவனை இன்னவாறே வழிபடுக எனவும், இரு முதுகுரவர் கற்பித்தலானும், அந்தணர் திறத்தும், சான்றோர் தேத்தும், ஐயர் பாங்கினும், அமரர்ச் சுட்டியும் ஒழுகும் ஒழுக்கம் தலைமகன் கற்பித்தலானும் வருவது கற்பு" எனக் கூறுகின்றார்.

வள்ளுவனாரும், "தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் பெய்யெனப் பெய்யும் மழை" என்றும் "தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற சொற்காத்து" என்றும் "தற்கொண்டான் வளத்தக்காள்" என்றும் கற்புடைமகளிர் இயல்பைக் களங்கமறத் தெள்ளி வடித்துக் காட்டுகின்றார். ஆதலின் கற்பித்தவாறொழுகலே கற்பு என்பது பண்டுதொட்டுச் சான்றோர் பலர்க்கும் ஒப்பமுடிந்த கொள்கையாகும் என்பது ஐயம் இன்றித் தெளிவாகும். இவ்வாறாய கற்பித்தவாறொழுகலுக்கு இயைபுடைத்தான இயற்கைச் சுபாவம் உடையனவே பெண்மைக் குணங்களும், அக்குணங்களின்பேறாய பெண்மையும் என்பது ஆண்டாண்டுக் கூறியவற்றான் விளங்கிக்கிடந்தன.

இனி, இக்கற்புப் பெண்மகளிருக்குச் சிறந்ததொன்றென்பதும், பெண்பிறவியின் பேறு அதுவே என்பதும் ஆன்றோர் வாக்கால் அறியலாகும். ஆசிரியர் தொல்காப்பியனார்,

"உயிரினும் சிறந்தன்று
நாணே நாணினும்
செயிர்தீர்க்காட்சிக்
கற்புச் சிறந்தன்று"

என்றும், வள்ளுவர் பெருமான்

"பெண்ணிற் பெருந்தக்க
யாவுள கற்பென்னும்
திண்மையுண்டாகப்
பெறின்" என்றும்

"பெற்றாற் பெறிற் பெறுவர்
பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு"

என்றும் கூறுமாற்றான் பெண்டிர்க்குக் கற்புடைமையே, அவர்தம் பெரும் பேறு என்பது புலனாகிறது. இன்னும் கவுந்தி என்னும் அறவணவடிகள் மாதருக்குக் கண்ணகியை அறிவுறுத்துமிடத்து,

"கற்புக் கடம் பூண்ட
இத்தெய்வமல்லது
பொற்புடைத் தெய்வம்
யாம்கண்டிலமால்
வானம் பொய்யாது
வளம் பிழைப்பறியாது
நீணில வேந்தர்க்குக்
கொற்றம் சிதையாது
பத்தினிப் பெண்டிர்
இருந்த நாடெனும்
அத்தகு நல்லுரை
அறியாயோ நீ"

என அவள் கற்புடைமையைப் போற்றிக் கற்பின் பயனையும் விளக்கிக் கூறுகின்றார். இனி, திருத்தக்க தேவர் காந்தருவதத்தையைச் சிறப்பிக்குமிடத்து அவரும் "படைப்பருங்கற்பினாள்" எனக்கற்பைச் சிறப்பித்துக் கூறுகின்றார்; பண்டைத் தமிழர் உலகத்தில் யாண்டுநோக்கினும் பெண் மகளிருக்குக் கற்பே அவர்தம் பெரும்பேறு என்றும், அதுவே உலகத்தைப்புரப்பது என்றும் கூறப்பட்டிருப்பதைக் காண்போம்.

இனிக்கற்பு நெறியைப் பின்பற்றி வாழும்வாழ்க்கை நெறிகளை ஆராய்வாம், குழவிப்பருவம் முதல் தாயர், தந்தையர், பணிப்பெண், ஆசிரியர், சான்றோர் என்றின்னோர் கற்பித்தவாறும் அன்னோர் வாழ்க்கையில் அவர் ஒழுகிய ஒழுக்கம் கற்பித்தவாறும், தமது பெண்மைக் குணங்கள் வாயிலாகப் பயிற்சியுற்று வளர்ச்சியடைந்து, உள்ளம் அப்போதனைகளிலும், ஒழுகலாற்றிலும் உறுதியடையும். பின்னர் வாழ்க்கைத் துணையெய்திய காலத்து, அவ்வாறு வளர்ச்சியடைந்துள்ள பெண்மையானது, தலைவன் தலைவி வாழ்க்கையில் நறும் பூவெனப் பெண்மை மலர்ந்து, அதன் இயல்பாய நறுமணம் வீசி, அதன் பேறாகக் கற்பென்னும் தேனொழுகு கனிகனிந்து தோன்றும். அப்போது தலைவன் கற்பித்தவாறொழுகலும் அவட்கு இயல்பாகும். ஆதலின் கற்பனைக் கடங்குதல் தலைவன் கட்டளையாகும் என்று கூறுதலும் பொருந்தாது. கட்டளைக்கமைந்து கற்புநிலைகாட்டலும் பெண்மையின் இயல்பாகாது. ஆன்றோர்கருத்தும் கற்புடைப் பெண்டிர் இயல்பும் அதுவேயாகும். இதனை வள்ளுவனார்;

"சிறைகாக்கும் காப்பெவன்
செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை"

என விளக்கமாக கூறுகின்றார்; அகலநோக்குமின்! எனவே தனது இன்பவாழ்வில் மாறாத உள்ளமோடு கற்பித்தவாறொழுகி இன்பநிலை பெருக்கி அறநெறி வாழ்தலின் கற்பித்தவாறொழுகல் அடிமை வாழ்க்கையன்று. அதன் விரிவை முன்னர்க் கூறினும். ஆண்டுணர்க.

இத்தன்மைதான் ஒழுக்கம் இயல்பாக வாய்க்கப்பெற்ற தலைவனிடத்துக் கொண்டுள்ள அன்பும், தலைவன் தலைவியிடத்துக்கொண்டுள்ள அன்பும் காரணமாக, அவர் உள்ளத்தால் ஒன்றுசேர்ந்து ஒருயிர் ஈருடல் போன்று காட்சியளிப்பர். அன்புடையார் என்புமுடைய பிறர்க்கு ஆதலின் உண்மைத் தலைவன் தலைவியர் கொண்டுள்ள அன்பின் திறம் பேசவேண்டா. அதுவும் பெண்மையின் வழியெய்திய அன்பு பெண்பாலாருக்கு எத்துணைப் பெரிதும் வலியுடைத்தாகும். அதன் இயல்பை உதாரணமுகத்தான் அறிவாம்.

ஒருதலைவன் பொருள்தேடுதற்கெண்ணித் தலைவியைப் பிரிந்து தன் நாடுவிட்டுப் பிறநாடு சென்றான். சென்றானாகத் தலைவிஉள்ளம், அவன்பாலுள்ள அன்பின் திறத்தால் பலப்பல எண்ணிப் பேதுறுகின்றாள்; அவள் துன்பநிலைகளுள் தன் தலைவன் செல்லும் வழியிடைத் துன்பம் அவளைப் பெரிதும் வாட்டுகின்றது. அதனால் தனது தலைவற்கு வழியிடைச் சிறிதும் துன்பங்கள் நேராதவாறு கடவுளைப் போற்றஎண்ணுகின்றாள். எண்ணுகின்றவள் தனது ஒப்பற்ற நாயகனே எமது கடவுள்; அவனைவிடச் சிறந்த தெய்வம் நமக்கேது? என்ற அன்பு முதிர்ந்த கற்பின் கலங்காத உள்ளத்தால் நின்று ஊசலாடி உள்ளம் உடைகின்றாள். அவ்வாறு உடைகின்றவள் தன் எள்ளத்தை நோக்கிக்கூறுகின்றாள்;

"தொன்னலம் தொலைபீங்
கியார் துயருழப்பத்
துறந்துள்ளார்
துன்னிஙங் காதலர் துறந்தேகு
மாரிடைக்
கன்மிசை யுருப்பிறக் கனைதுளி
சிதறென
இன்னிசை யெழிலியை இரப்ப
வும் இயைவதோ"

புனையிழையா யீங்குநாம் புலம்
புறப் பொருள்வெஃகி
முனையென்னார் காதலர்
முன்னிய ஆற்றிடைச்
சினைவாடச் சிறக்குநின் சினந்
தணிந்தீமெனக்
கனைகதிர்க் கனலியைக்
காமுறலியைவதோ?
ஒளியிழாயீங்கு நாம் துயர்
கூரப் பொருள்வயின்
அளியொரீக் காதலர்கன்றேகு
மாரிடை
முளிமுதன் மூழ்கிய வெம்மை
தீர்ந்துறுகென
வளிதருஞ் செல்வனை வாழ்த்த
வும் இயைவதோ?

எனக் கூறிக் கவலுகின்றாள்; இதனைக் கண்ணுற்றாள் தோழி. கண்ணுற்ற தோழி பெண்ணே! நீ அவர் திறம் நோக்கி வருந்தாதே; உனது கற்பு அவரைப் பேணும் என்கிறாள்.

"வறன் ஓடின் வையகத்து வான்
தருங்கற்பினாள்
நிறன் ஓடிப்பசப்பூர்தல்
உண்டென
அறன் ஓடிவிலங்கின்று அவர்
ஆள்வினைத் திறத்தே"

என அவள் கற்புடைமையின் வலிமையை எடுத்துக்கூறி, அவள் கற்புடைமையை அவளுக்குப் புலப்படுத்தித் துணிவு பிறக்கச் செய்கின்றாள். இந்நிகழ்ச்சியை ஆழநோக்கி அவள் சிந்தையை ஓர்மின்! தலைவனிடத்துள்ள அவள் அன்பின் திறமும், அவ்வன்பின் நிகழ்ச்சிகளும், அவள் கற்பின் செவ்வியும் புலப்படுமாறு காண்க (தொடரும்)

## அமுதத் தேன்

—திமிலை மகாலிங்கம்—

அன்புத் தமிழிசையில் ஆனந்தம் சேர்த்ததிலே
தென்பை எனக்கூட்டித் தேறுதல்கள் சொல்கின்றாள்
என்பு தசையாக என்னில் பிணைந்துவிட்ட
இன்பத்தமிழணங்கைஎன்னவென்று நான் சொலட்டும்?

கண்ணிற் கலக்கமெனிற் காலை வருடிவிட்டு
மண்ணுக்கி ஏனோநீ வாழ்வைக் கெடுக்கின்றாய்
கண்ணைவிழி ஈதோ கவிதைக் கருவொரு
உண்ணத் தருகின்றாள் உண்கின்றேன் நானங்கே

என்னைத் தெரியாது என்னுணர்வை நானறியேன்
கன்னித் தமிழோசை காதில்விழக் கேட்கின்றேன்
பன்னிப் பலபேச்சுப் பதங்கள் கிலுகிலுத்து
என்னிச்சை தீர்க்கின்றாள் எவளோ அவளறியேன்

ஞானத்தின் எல்லை நலமுணரா நல்லநிலை
வானத்தின் எல்லை வரப்போக மந்தநிலை
மோனத்தின் கோட்டு முகட்டினிலே காட்டிவைத்து
கானத்தி லென்னைக் கணமும் புதைக்கின்றாள்

எனக்கே தெரியாது என்னவெலாம் செய்கின்றாள்
தனக்கோ நலந்நீது சம்பவித்தல் போற்றுகிலள்
உனக்கேது வேண்டும் உரையென்றே கேட்கின்றாள்
எனக்கேது வேண்டுவது நானறியேன் அந்நிலையில்

பஞ்சுத் தமிழொலியிற் பாடல் பலபுகட்டி
நெஞ்சுத் தளமெல்லாம் நெக்குருக வைத்திடுவாள்
வஞ்சிக் கொடிநல்லாள் வாயமுதம் தேனமுதம்
கிஞ்சித்தும் வேண்டுகிலேன் கீழாம் பிறநிலைகள்.

# மேதின கொண்டாட்டத்தின் பூர்வோத்திரம்

— "தூரதர்சினி" —

அகில உலகமும் கொண்டாடும் ஒரு விழா இருக்குமானால் அது மே தினம் தான். இதை சர்வதேச தொழிலாளர் தினம் என்றும் குறிப்பிடுவார்கள். தொழிலாளர் தினம் என்றவுடனே அதை அரிவாளும் சம்மட்டியும், பொதுவுடமை, ரஷ்யா முதலியவற்றோடு தான் சம்பந்தப்படுத்துவோம். ஆகையினால்தான் மே தினத்தின் பூர்வோதயப் பிறப்பிடம் அமெரிக்கா என்று சொன்னால் பலர் அதை நம்பமாட்டார்கள். முதலாளித்துவத்தின் உறைவிடமாகிய அமெரிக்காவிலா மே தினம் உற்பத்தியாகியது என்று கேட்கத் தோன்றும். ஆனால் அதுதான் உண்மை.

1886-ம் ஆண்டில் தான் முதலாவது மே தினம் அமெரிக்காவில் கொண்டாடப்பட்டது. அந்த முதலாவது மேதினத்தை கொண்டாட்டம் என்று கூறுவது தவறு. ஏனென்றால் அதில் ஏராளமான உயிர்கள் பலியாகின. காயமடைந்தவர்களுக்கோ கணக்கில்லை.

நாளொன்றுக்கு எட்டுமணி நேரம் தான் வேலைசெய்வோம் அதற்குமேல் வேலை செய்யும்படி எந்தமுதலாளியும் நிர்ப்பந்திக்கலாகாது — என்று அமெரிக்க தொழிற்சாலைகளில்வேலை செய்யும் பல லட்சக்கணக்கான தொழிலாளர்கள் தீர்மானித்தார்கள். இந்த தீர்மானத்தை செயலில் நிரூபிப்பதற்காக 1886-ம் ஆண்டு மே மாதம் 1-ந் திகதி வேலைக்குப்போவதில்லை என்று முடிவுசெய்யப்பட்டது.

அந்தக் காலத்தில் இப்படிப்பட்ட ஒரு கோரிக்கை மிகவும் புரட்சிகரமானதும் மூடத்தனமானதும் என்று நினைத்து அமெரிக்க தொழிலாளர் எல்லோரும் அதைஆதரிக்கவில்லை. இந்தக் கோரிக்கையை முதலாளி வர்க்கமும் பத்திரிகைகளும் கடுமையாக எதிர்த்தன. இருந்தும் அன்றைய தினம் அமெரிக்கா முழுவதிலும் சுமார் 5 லட்சம் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்தனர்.

முதலாளித்துவத்துக்கு இது பெரும் தலையிடியாய்ப் போய்விட்டது. ஆட்களைத் தூண்டிவிட்டு தொழிலாளர் கூட்டங்களில் கலகம் விளைத்தனர். அடிதடி ஏற்பட்டது. தொழிற்சங்கத் தலைவர்கள் பலர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டனர். மே மாதம் 4-ம்திகதி அமைதியாக நடந்துகொண்டிருந்த ஒரு தொழிலாளர் கூட்டத்தில் எறிகுண்டு வீசப்பட்டது. ஏழெட்டுப்பேர் ஸ்தலத்திலேயே மாண்டனர். நூற்றுக்கணக்கானவர்களுக்கு படுகாயம் ஏற்பட்டது. இப்படியே முதலாவது மே தினம் ரத்தக் களரியில் முடிவடைந்தது.

தொழிலாளி வர்க்கத்தின் ஒற்றுமையை நிரூபிப்பதற்காக மே மாதம் முதலாம் திகதியை சர்வதேச தொழிலாளர் தினமாகக் கொண்டாடவேண்டுமென்று 1890ம்ஆண்டு பாரிஸ நகரத்தில் நடந்த ஒரு சர்வதேச மகாநாட்டில் தீர்மானிக்கப்பட்டது. ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் பிரதிநிதிகள் வந்திருந்தனர். 1919-ம் ஆண்டு லெனினும் ட்ரொஸ்கியும் ரஷ்யாவில் ஆட்சிபீடத்தைக் கைப்பற்றியபோது தான் தொழிலாளர்களின் கனவு பலித்தது. மேதினம் ஒரு விடுமுறையாக்கப்பட்டது. சரித்திரத்தில் முதல் முறையாக அரசாங்கத்தின் ஆதரவோடு மே தினம் கொண்டாடப்பட்டது.

இலங்கையில் முதலாவது மேதினக் கொண்டாட்டத்தை ஏற்பாடு செய்தவர் பழைய தொழிற்கட்சித்தலைவர் திரு. ஏ. ஈ. குணசிங்கா. பின்பு சமசமாஜக்கட்சியும் கொம்யூனிஸ்ட் கட்சியும் மே தினத்தன்று தங்கள் சொந்த ஊர்வலங்களையும் பொதுக்கூட்டங்களையும் நடத்திக் கொண்டாடினார்கள். 1956-ம் வருடம் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியுடன் பிலிப் குணவர்த்தன, தஹநாயக்கா முதலிய தலைவர்கள் சேர்ந்து எம். ஈ. பி. அரசாங்கம் பதவி ஏற்றபோது திரு. பண்டாரநாயகா மே தினத்தை ஓர் அரசாங்க வங்கி விடுமுறையாக்கினர்.

மே தினம் சாதி, சமயம், நிறம் முதலிய பேதங்களுக்கு அப்பாற்பட்டது. எல்லோரும் ஓர் இனம் என்ற தத்துவத்தை மே தினக் கொண்டாட்டத்தில் காணமுடிகின்றது. உலகத்து தொழிலாளர்கள் எல்லோரும் பசி, பிணி, பயம், நிறவெறி முதலியவற்றிலிருந்து விடுபட்டு சுகஜீவனம் நடத்த வேண்டுமென்பதே மே தினக் கொண்டாட்டத்தின் நோக்கம்.

வெளிவந்துவிட்டது!

கம்பராமாயணம்

அயோத்தியாகாண்டம்
மந்தரை சூழ்ச்சிப் படலமும் — கைகேயி சூழ்வினைப் படலமும்
விளக்கவுரை
உரையாசிரியர்: வித்துவான் க. வேந்தனார் அவர்கள்
விலை ரூபா 4-00

விற்பனை உரிமை நூல்கள்:

பாரதச் சுருக்கம்
ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள்
விலை ரூபா 3-75

விபுலானந்த ஆராய்வு
விலை ரூபா 2-25

கிடைக்குமிடம் :
ஸ்ரீ லங்கா புத்தகசாலை
234, காங்கேசன்துறை வீதி, :::: யாழ்ப்பாணம்

# ஈழநாடு

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389

யாழ்ப்பாணம் குரோதி ஆண்டு சித்திரை மீ 21உ (3-5-64)


## புதுடில்லிப் பேச்சுகள்

புதுடில்லியிலே இப்போது பிரதமர் நேருஜிக்கும், 'காஷ்மீர் சிங்கம்' எனப்படும் ஷேக் அப்துல்லாவுக்கும் முக்கியமான பேச்சுகள் நடக்கின்றன. அப்பேச்சுகளின் முடிவை அறிய இலங்கையுள்ளிட்டு உலகில் பலநாடுகளும் ஆவலுடன் காத்துள்ளன.

ஏன்? இப்பேச்சுகள் வெற்றியுடன் முடிவதில்தான் இந்தியா, பாகிஸ்தான், காஷ்மீர் மட்டுமன்றி, ஆசியா மக்களின் அமைதியையும் அவர்களது எதிர்கால நல்வாழ்வும் அடங்கி இருக்கின்றதென்று கூறின் அது மிகையாகாது.

ஷேக் அப்துல்லா ஒரு முஸ்லீம். நேருஜி இந்து சமூகத்தில் பிறந்தவர். இருவரும் பழைய நண்பர்கள். காஷ்மீரைச் சேர்ந்தவர்கள். இடையிலே இருவருக்கும் அரசியல் வேற்றுமைகள் தீவிரமாக ஏற்பட்டன. தமது நண்பரை பத்தாண்டுகளுக்குமேல் சிறைப்படுத்தி வைக்கவேண்டிய கசப்பான நிலை நேருஜிக்கு ஏற்பட்டது. இருவரும் விரோதிகளாகி விடுவார்களென்று பலரும் எதிர்பார்த்தனர். ஆனால் புதுடில்லியிலே நேருஜியின் விருந்தினராக ஷேக் அப்துல்லா இருந்து, இருவரும் சுமுகமாகப் பேச்சுகள் நடத்தி வருவதைப் பார்க்கின்றோம். இது மகிழ்ச்சியும் நம்பிக்கையும் அளிக்கக் கூடிய ஒரு விஷயம்.

சிறையிலிருந்து விடுபட்டதும் ஷேக்அப்துல்லா பேசிய பேச்சுகளைக் கேட்டதும், அவரை மீண்டும் சிறையில் வைக்கவேண்டுமென்றும் சில வட்டாரங்கள் கூச்சலிட்டன. ஆனால் நேருஜி அப்படிச்செய்ய வில்லை.

பத்தாண்டுகள் அவரை சிறையில் வைத்தும் காஷ்மீர் பிரச்னை தீரவில்லை. இதற்கு மாறாகப் புதிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன. மீண்டும் அவரைச் சிறைப்படுத்தினால், பிரச்னை தீருவதற்குபதில் அது மிகவும் மோசமாகக் கூடுமென்பதை உணர்ந்ததுடன், இந்தப் பிரச்னைக்கு ஒரு நல்ல முடிவு ஏற்படச் செய்யவேண்டுமென்ற நோக்கத்துடனேயே, நேருஜி, ஷேக்கை அழைத்துப் பேசுகின்றார்.

இப்பேச்சுகள் வெற்றி பெறுவதாக வைத்துக் கொள்வோம். பின்னராவது இந்தியா-பாகிஸ்தான் பிரச்னைகள் தீருமா? காஷ்மீர் பிரச்னை தீர்க்கப்பட்டாலும், புதிய புதிய பிரச்னைகளை பாகிஸ்தான் கிளப்புமென்றும் சிலர் அஞ்சுகின்றார்கள். ஒரே நாட்டினராக இருந்துவந்த மக்கள், இரண்டாகப் பிரிந்தும் பிரச்னை தீரவில்லை. இருவரும் ஆயுத முஸ்தீபுகளைச் செய்துகொண்டு பரஸ்பர விரோதிகளாக நிற்கின்றார்கள். இது பெரிய கண்றாவி.

ஆசியாமக்கள் ஒன்றுபட்டு விட்டால் தங்களுக்கு ஆபத்தாகுமென்று தவறாகக் கருதும் சில சுயநலசக்திகள் இந்தியா-பாகிஸ்தான் பிளவுகளை அதிகரிக்கத் தங்களாலானதைச்செய்வதாகக் கூறப்படுகிறது. மத விரோதங்களுக்கு மேலும் தூபம் போட்டு, இருநாடுகள் மட்டுமன்றி, ஆசியா மக்களே ஒருவருக்கொருவர் தற்கொலைச்சண்டைகளில் ஈடுபட்டு அழியவும் அவர்கள் முயலக்கூடும்.

இந்த ஆபத்திலிருந்து விடுபட நாம் என்ன செய்யவேண்டும்? இதைப் பற்றி நாம் ஒவ்வொருவரும் சிந்திக்கவேண்டிய சமயம் வந்துவிட்டது. இலங்கையிலும் மதவேற்றுமைகளை கிளப்பிவிட்டு நாம் அமைதியாக வாழமுடியாதபடியும், உள்நாட்டுக் குழப்படிகள் ஏற்படுமாறும் செய்ய சிலர் மறைமுகமாக கட்டுப்பாடான முறையில் வேலை செய்வதாகக் கூறப்படுகிறது. இதுபற்றி நாம் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

உலகமக்களிடையே அன்பை வளர்த்து, எல்லாரும் நல்வாழ்வு வாழவேண்டுமென்பதே எல்லா மதங்களின் அடிப்படை நோக்கமும். ஆனல் அதற்கு நேர்மாறான காரியங்கள் மதத்தின் பெயரால் நடக்கின்றன. சுயநலச் சுரண்டல்கள் அதிகரித்துள்ளன. இதனல் பொதுமக்களில் பலருக்கும் சிறப்பாக வாலிபர்களுக்கும் மதநம்பிக்கை குறைந்து பலாத்கார புரட்சி இயக்கங்களிலே மனம் திரும்புகின்றது.

இந்த நிலை இப்படியே நீடித்தால் எல்லாச் சமயங்களும் அழிந்தேபோகும். வேறெதற்குமில்லாவிடினும், இந்த ஆபத்திலிருந்து தங்களைக்காத்துக் கொள்ளவாவது எல்லாச் சமயத்தலைவரும், பழைய கதைகளை மறந்து, ஒன்று கூடி மனம்விட்டுப்பேச முன்வரவேண்டும். எல்லா மதங்களுக்கும் மக்களுக்கும் பொதுவானது தெய்வம். மக்களனைவரையும் ஒன்றுபடுத்த அந்த அன்புத்தெய்வம் காத்துள்ளது தெய்வத்தை மறப்பதால்தான் பல இன்னல்களும். ஆகவே நமது பல பிரச்னைகளையும் தீர்க்கவாம் அந்த தெய்வசக்தியை பயன்படுத்தவேண்டும் மகாத்மா முதலிய பெரியோர்கள் அவ்வழியை நாழ்ந்து காட்டியுள்ளனர். அதன்படி தெய்வத்தின் பெயரால் முயற்சித்தால் காஷ்மீர் முதலிய பிரச்னைகள் மட்டுமன்றி, நமது பல்வேறு பிரச்னைகளையும் தீர்க்க முடியாதா? சிறப்பாக தெய்வ நம்பிக்கை உள்ளதாகக்கூறும் பலமதத்தவர்களும் இவ்விதம் புதிய முயற்சி செய்யவேண்டிய சமயம் வந்துவிட்டதல்லவா?

ஈழத்தில் தான்தோன்றி ஈசுவரங்கள் 2

## ஒட்டிசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன்

— வை. முத்துக்குமாரசுவாமி பி. ஏ. —

வன்னி நாட்டிலே மாங்குளம் - முல்லைத்தீவு வீதியிலே ஒட்டிசுட்டான் என்னும்பதி காட்டின் மத்தியில் காணப்படுகிறது. 18-ம் நூற்றுண்டிலே யாழ்ப்பாணத்து இடைக்காடு என்னும் பகுதியைச் சார்ந்த ஒரு குடும்பத்தினர், அவ்வூரை விட்டுவெளியேபோய் வவுனியாப் பகுதியில் உள்ள ஒட்டிசுட்டானில் வசித்து வந்தனர். அங்கு கமத்தொழிலில் ஈடுபட்டிருந்தபோது, இக்குடும்பத்துப் பெரியார் காத்திராப்பிரகாரமாக, பூமிக்குள் ஒரு லிங்கத்தைக்கண்டு பிடித்தார். இதுவே இன்றுகாணப்படும் "ஒட்டி சுட்டான் ஈஸ்வரன் கோவிலில்" உள்ள மூலலிங்கம். இவ்விடத்தில் வளர்ந்த குரக்கன் கட்டைகள் அறுவடை செய்த பின் எரிக்க முடியாதபடியால் இது வேகாவனம் எனப்பட்டது. இளைப்பாறிய பகிரங்க பகுதி சைவ ஓவசியர், இங்கு ஒரு குளத்தை அமைத்து உதவியுள்ளார்.

இந்தக் கோவிலைப் பற்றி ஊரார் கூறும் கர்ணபரம்பரைக் கதைகள் பல. திருவிழா நாட்களில் இரவில் இங்கு இன்னிசை கேட்கிறதாம். இக் கோவிலில் ஓர் அதிபர் பழையகாலத்தில் இருந்தனர் அப்பகுதியில் உள்ள கிராமத்தவன் தனது வாழை முதல் குலை போட்டவுடன் இதனை இக்கோவிலுக்குப் படைக்க நேர்த்தி செய்திருந்தான். ஆனல் இக்கோவில் அதிபர் இதனைக்கண்டதும் அதிலுள்ள திறமான பழங்களைப் பிடுங்கி எடுத்தார்.

அதன் பின் அக்கிராமத்தவன் மிகவும் துக்கத்துடன் மிகுதிப் பழங்களை சிவபெருமானுடைய பூசைக்குப் படைத்தனன். பின்பு அவர் அக்கோவிலில் தங்கி நித்திரை செய்தார். இரவில் ஒரு கனவில் அந்த அதிபருக்கு அளித்த பழங்களே தமக்கு உவந்தது என்று ஈஸ்வரன் கூறினர். அவன் மிக மகிழ்ச்சியுடன் வீடு திரும்பினன்.

இக் கோவிற் திருவிழா ஆண்டுதோறும் ஆனி-ஆடி மாதங்களில் பதினைந்து நாட்களுக்கு நடைபெறும். வன்னி நாட்டில் மாத்திரமன்றி யாழ்ப்பாணக் குடாநாட்டில் இருந்தும் இங்கு நடைபெறும் வேட்டைத்திருவிழாவுக்கு பல சைவர்கள் வருவதுண்டு.

இங்கு மனம் குவிவதற்கு ஏற்ற சூழ்நிலை உண்டு. இங்குள்ள லிங்கம் சோழர் காலத்துக்கு அதாவது 40-ம் ஆண்டுக்கு முற்பட்டது எனலாம். கி. பி. 5-ம் ஆண்டளவில் இந்தியாவில் வாழ்ந்த திருமூலர், தமது 2747-ம் திருமந்திரத்தில் இலங்கையைச் சிவபூமி எனக் கூறுகிறுர். அவர் பழைய வன்னி நாட்டில் உள்ள தான்தோன்றி ஈசுவரம், உருத்திரேஸ்வரம், முன்னேசரம், நகுலேசுவரம், திருக்கேதீச்சரம், திருக்கோணமலைக்கு அண்மையில் காணப்படும் திருக்கரசை அல்லது அகத்தியர் தாபனம், திருக்கோணேசுவரம் முதலிய சிவத்தலங்களை அறிந்திருந்த படியாற்றன் இவ்வாறு கூறினர் என்று ஊகிக்கற்பாலது.

ஈழத்தின் இரு தான்தோன்றி ஈசுவரங்களின் வரலாற்றில் இருந்து நாம் பெறக்கூடிய உண்மை என்னவெனில் வன்னி வளர் நாட்டிலே சைவ சமயப்பண்பு மக்களின் மனதில் ஆழவேருன்றி இருக்கிறதென்பதே ஆகும்.

## அருணகிரிநாதர் விழா

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சிகள் முடிவடைந்தன. முதல் நாள் விழாவிற்குத் தலைமைதாங்கிய திரு. எம் வைரவப்பிள்ளை தமது தலைமையுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார். "இவ்வளவு நேரமும் இசை வெள்ளத்தில் மூழ்கியிருந்த உங்களை இயல் பகுதிக்கு அழைத்துச் செல்ல விரும்புகிறேன். அருணகிரியின் அன்புகடந்த பற்றையும் பக்தியையும் நாம் இலகுவில் மறந்து விடமுடியாது. அத்துடன் அவரது திருப்புகழ் நாம் தினமும் படிக்கும்தோறும் எங்களை உருக்குவதாயும் ஊக்குவிப்பதாயும் இருக்கின்றது. இந்த மன்றத்தினர் தமிழில் தான் இசைபாடவேண்டும் என்ற நோக்கத்துடன் இருப்பதாக அறிகின்றேன். அது நல்ல முயற்சி. தமிழ் என்ருல் இசை. இன்று இசையில் பலவிதமான மாற்றங்கள் வந்துள்ளன பிற இசை எங்களுடைய இசையுடன் வந்தும் சேர்ந்துள்ளது. இதனல் தமிழ் இசை பல மாறுதல்களுக்குள்ளாகியுள்ளது."

இரண்டாவது நாள் நிகழ்ச்சிகளில் செல்வி செல்வம் நாராயணசாமி, திரு. கே. ஆர். நடராஜ, திருமதி சரோஜினி தனபாலசிங்கம், திரு. க. கணபதிப்பிள்ளை முதல் திரு பழனிவேல் ஆகியோரின் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. திரு. க. கணபதிப்பிள்ளையின் பாட்டு ரசிகர்களைப் பெரிதும் கவர்ந்துவிட்டதென்றே கூறவேண்டும். பேராசிரியர் திரு. க. கணபதிப்பிள்ளை தமது தலைமையுரையில் குறிப்பிடும் பொழுது இன்று நாட்டிலே எத்தனையோ சங்கங்கள் இருக்கின்றன. ஆனல் நாம் இது போன்ற விழாக்கள் மூலம் தான் இசையை வளர்க்கமுடியும். அப்பொழுது தான் மக்கள் கலையின் பெருமையையும் இசையின்மகிமையையும் அறிய முடியும். அத்துடன் நாங்கள் ரசிகர்களாக மட்டும் இருக்காமல் இசையையும் ஒரு அளவுக்கேனும் கற்றுக் கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் நாம் கலைஞர்களின் திறமையையும் மதிப்பையும் உணர முடியும் என்று குறிப்பிட்டார்.

மூன்றும் நாள் காலை நிகழ்ச்சியில் அருணகிரிநாதர் ஆராதனையும் பக்திப் பாடல்களும் இடம் பெற்றன. இந்த நிகழ்ச்சியில் சகல கலைஞர்களும் பங்குபற்றினர்கள். ஞாயிறு காலை நிகழ்ச்சி திரு. பி. சண்முகசுந்தரம் கோஷ்டியினரின் நாதசுரத்துடன் ஆரம்பமாகியது. மாலையில் செல்வி கௌரி கனகரத்தினம், திருவி செல்லத்துரை, திருமதி பூமணி இராஜரத்தினம், திரு. ஏ. சுந்தரம் திரு. எஸ். சத்தியலிங்கம் ஆகியோரின் நிகழ்ச்சிகள் இடம் பெற்றன. ஞாயிறு மாலை நிகழ்ச்சிகள் யாவும் சிறந்ததாகயிருந்தமையால் ரசிகப் பெருமக்கள் விழா முடியும் வரை அகலாதிருந்தனர். காலை நிகழ்ச்சிகளுக்குத்தலைமைதாங்கிய திரு. இ. பாலசிங்கம் தமது தலைமையுரையில் பின்வருமாறு குறிப்பிட்டார். "வாழ்க்கையில் நாம்உயரவேண்டுமானல் அருணகிரி வழி வகுத்த முறையை கைப்பிடித்தல் வேண்டும். அப்பொழுதுதான் நாம் உய்யலாம். அருணகிரியின் வழி நடந்தால் நாம் வாழ்வில் நிச்சயம் உயர்வு பெறலாம் வால் பிடித்தும் கால் பிடித்தும் வாழ்ந்தால் நாம் காலப்போக்கில் பின்தங்கி விடுவோம். ஆகையால் எங்கள் அல்லல் போக— தொல்லை போக—துயரம் போக—நல்ல குணம் அதிகமாகக் கணபதியைக்கைதொழுதல் வேண்டும்"

இது போன்ற விழாக்கள் நடத்துவதென்ருல் நிதி அத்தியாவசியம் என்பதை நாம உணர்த்த வேண்டியதில்லை. ஆகையால் ரசிகப் பெருமக்கள் இது போன்ற மன்றங்களுக்கு ஆவன செய்து அவர்களை ஊக்குவிக்கவேண்டும். அத்துடன் ரசிகப் பெருமக்கள் கவனிக்க வேண்டிய விஷயம் என்னவென்ருல் தங்களுக்கு வேறு வேலைகள் இருந்தாலும் இது போன்ற விழா நாட்களிலாகுதல் தங்கள் கிரமங்களைப்பாராது இவ்விழா வைபவங்கள் முடியும் வரையாகுதல் இருந்து போவது கலைஞர்களுக்கு ஓர் உற்சாகத்தையும் ஊக்கத்தையும் கொடுக்கும்.

மூன்ருவது நாள் மாலை நிகழ்ச்சிக்கு திரு. ச. சிற்றம்பலம் தலைமைதாங்கினர்.

## கொழும்பில் அந்தர் யோகம்

"வாழ்க்கை முழுவதும் வெளிநோக்கிக்கொண்டே இருக்கிறோம். அதனல் அநுகூலம் எதுவும் அடைய முடிவதில்லை. கடவுள் என்கிற பதமே கடஉள் என்று சொல்லிந்தருகிறது. உள் நாடினலன்றி உண்மையின்பத்தை அநுபவிக்க முடியாது. இதற்கு வழிகாட்டுவதே அந்தர்யோக சாதனை.

இவ்வாறு கொழும்பு திவ்ய ஜீவன சங்கத்தினர் சித்திரா பூர்ணமி தினத்தன்று கொச்சிக்கடை தம்பையா சத்திரத்தில் நடத்திய அந்தர் யோக சாதனையின் போது மேற்படி நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய யோகிராஜ் சுவாமி சச்சிதானந்தஜி கூறினர்.

அவர் மேலும் கூறியதாவது: "தன்னலமின்றி. தனது ஒவ்வொரு மூச்சையுமே பிறருக்கென அர்ப்பணித்து அன்பர் பணி புரிபவர்களுக்கு இன்ப நிலை தானகவே வந்தெய்தும். அவர்கள் அதை நாடிப்போவதில்லை. தூய்மையும் அடக்கமும் பெற்ற மனலைதக்கருவியாகக்கொண்டு பணியாற்றுபவர்கள் இறையருளை வேண்டி நிற்கத்தேவையில்லை.

காலை 7 மணியளவில் பிரார்த்தனையுடன் ஆரம்பித்து மாலை 8 மணிவரை தொடர்ந்து நடைபெற்ற அந்தர் யோக நிகழ்ச்சிகளில் பிரார்த்தனை, யோகாசனம்,பிராணயாமம், ஜபம், தியானம், பக்திப்பாடல், பஜனை, உபன்யாசம், சந்தேகம் தெளிதல், அங்கத்தவர் அபிப்பிராயம் ஆகியவை இடம் பெற்றன. மேற்படி நிகழ்ச்சிகளின் மாலைக் கூட்டத்தின் போது அங்கத்வவர் ஒருவர் இலங்கையில் கண்தானம்குறைவாக இருப்பதைக்குறிப்பிட்டு கண்தானம் வேண்டிக் கோரிக்கைவிடுத்ததன் பேரில் யோகிராஜ்ஸ்வாமி சச்சிதானந்தஜியும் அவர்களைத் தொடர்ந்து பல ஆண்களும் பெண்களும் கண் தானம் செய்ய முன்வந்தனர்.

# உலகமேடை

## கென்யாவும் ஹாக்கியும்

இந்தியாவுக்கும் கென்யாவுக்குமிடையே சமீபத்தில் நடந்துமுடிந்த ஐந்து ஹாக்கி டெஸ்டுகளில், இருநாடுகளும் தலா இரண்டு போட்டிகளில் வெற்றிபெற்றன. ஒன்று வெற்றி தோல்வியின்றி முடிந்தது. 5-வது டெஸ்டில் கென்யா 3 கோல்கள் போட்டு வெற்றி பெற்றது. இந்தியா கோலே போடவில்லை!

ஏன்? இந்திய ஹாக்கிக்கு என்ன வந்தது என்று கேட்பது காதில் விழத்தான் செய்கிறது. ஆம். ரூப்சந்தும், தயான்சந்தும் தீவிரஹாக்கியிலிருந்து விலகியது முதலே, உலக அரங்கில் இந்தியாவின் ஹாக்கித் தரம் படிப்படியாகக் குறைந்து தான் வருகிறது.

ஏறக்குறைய 25 அல்லது 30 ஆண்டுகள் ஹாக்கிவிளையாட்டில் இந்தியா உலக சாம்பியனாக விளங்கியது. அடுத்தடுத்து நடைபெற்ற எல்லா ஒலிம்பிக்கிலும் அதனிடமிருந்து சாம்பியன் கிரீடத்தை எவராலும் தட்ட முடியவில்லை. பந்தைக் கட்டுப் படுத்துவதிலும், நுட்பத்திலும், லாவகத்திலும், தந்திரத்திலும், வேகத்திலும் இந்திய வீரர்கள் ஒவ்வொருவருமே சாம்பியன்களாய் இருந்தனர். இந்திய உபகண்டம் பிரிக்கப்பட்டபின் சிறந்த ஹாக்கிவீரர்களில் சிலர் பாகிஸ்தானுக்கும் பிரிந்து சென்றுவிட்டதால், சாம்பியன் போட்டியில் பாகிஸ்தானே பலமிக்க சவாலாய் இருந்தது. கடைசியில் எல்லோரும பயந்தது போலவே கடந்த ஒலிம்பிக்கில் பாகிஸ்தான் சாம்பியனாகி தங்கமெடலைப் பெற்றது.

ஒலிம்பிக்போட்டிகளில் அதிகமாகத் தங்கமெடல்களைப் பெறும் நாடுகள் அமெரிக்காவும், ரஷ்யாவுமே. ஆசியாவில் அதிகத் தங்கமெடல்கள் ஜப்பானுக்கே கிடைக்கின்றன. ஆனால் 44 கோடி மக்களைக் கொண்ட இந்திய நாட்டுக்கு சாதாரணமாக ஒரு தங்க மெடலே கிடைப்பது வழக்கம். இந்த ஒன்றும் கூட ஹாக்கியிலிருந்தே கிடைக்கும். ஆனால் இதுவும் இப்போது பறிபோய் விட்டது. உலகிலேயே இரண்டாவது ஜனத்தொகையைக் கொண்ட ஒரு நாடு, ஒரே ஒரு தங்கமெடலைக்கூட பெறமுடியாமல் இருக்கும் விஷயம் விளையாட்டு விமர்சகர்களுக்குப் பெரும் அதிசயமாய் இருக்கும்.

எனவேதான் பல அம்சங்களிலும் இந்தியாவின் விளையாட்டுத் தரத்தை உயர்த்த காலஞ்சென்ற ஸ்ரீமதி ராஜ்குமாரி அமிர்தகௌரி அரும்பாடுபட்டார். அவரின் பெயரால் விரிவான பயிற்சித் திட்டம் ஒன்றும் இப்போது அமுலில் இருக்கிறது.

ஆனால் ஹாக்கி விளையாட்டு இதற்கு உட்பட்டதல்ல. இந்தியாவிடமிருந்து அதைப் பறிக்க முடியாது என்ற எண்ணம், பாகிஸ்தான் ஒரு அதிகப்படி கோலைப் போட்டு வெற்றிபெற்றதன் மூலம் முறியடிக்கப்பட்டது. ஆனால் தொடர்ச்சியாக 30 வருடங்கள் சாம்பியனாக இருந்து சமீபத்தில் இழந்த அந்தப் பட்டத்தை, அடுத்து டோக்கியோவில் நடைபெறவிருக்கும் ஒலிம்பிக்கில் மீட்டுவிடுவதென இந்தியா கொண்டிருக்கும் உறுதியான நம்பிக்கையை, ஹாக்கி உலகில் புதிய ஒரு நாடு - ஆபிரிக்காவிலுள்ள கென்யாநாடு சிதறடித்துவிடும் போல் இருக்கிறது.

இந்தியாவில் கென்யா வீரர்கள் விளையாடிய ஆட்டத்தைக் கண்டவர்கள் பிரமிக்காமலிருந்திருக்க முடியாது. இந்தியா கையாளும் அதே நுட்பம், அதே வேகம், அதே லாவகத்தைக் கொண்டு, இரண்டு டெஸ்டுகளில் ஹாக்கி உலகின் நீண்டகால சாம்பியன்களை அவர்கள் தோற்கடித்திருக்கிறார்கள். குறிப்பாக பெர்னாண்டஸ் என்ற கென்யாவீரர் வெற்றிக்குப் பெரிதும் காரணமாய் இருந்தார்.

கால்நூற்றாண்டுக்குமுன் இந்திய ஹாக்கி வீரர்கள இலங்கைக்கு வந்திருந்தார்கள். அப்போது இலங்கைக்கு எதிராக டசன்கணக்கான கோல்களைப் போட்டு இங்குள்ள ஹாக்கி ரசிகர்களை பிரமிப்பில் ஆழ்த்தினார்கள். தயான்சந்த் போன்றவர்களின் மட்டையில் பந்து ஏன் ஒட்டிக் கொண்டிருக்கிறது? அதில் பிசின் ஏதும் இருக்கிறதா, அல்லது அது மந்திரக் கோலா என்று வியப்படைந்தார்கள். ஆனால் மந்திரமும் இல்லை; மாயமுமில்லை. தயான்சந்த் கையில் எந்த மட்டை இருந்தாலும் பந்து அதனுடன்தான் ஒட்டிக்கொள்ளும் என்பதை, அந்த அதிசய வீரர் பலமுறை நிரூபித்துக் காட்டினர். உலகிலேயே தலை சிறந்த ஆட்டக்காரரான தயான்சந்த் இப்போது ஓய்வு பெற்றுவிட்டார். வீரர்களுக்குப் பயிற்சிமட்டுமே அவர் அளித்து வருகிறார்.

சமீப வருடங்களாக இந்தியா வெற்றிபெறுவதற்குப் போட்டுவந்த கோல்களின் எண்ணிக்கையும் குறைந்துவருகின்றன. இதற்கான காரணங்களில், வர வர உலகநாடுகளின் ஹாக்கி தரம் உயர்ந்து வருவதும் ஒன்றாகும்.

ஐரோப்பாவில் இப்போது ஹாலந்து, ஜெர்மனி ஆகிய நாடுகளின் ஹாக்கிதரம் வெகுவாக உயர்ந்திருக்கிறது. பாகிஸ்தான், கென்யா ஆகிய நாடுகளும் முன்னணியில் இருக்கின்றன. எனவே அடுத்த ஒலிம்பிக்கில் சாம்பியன் யார் என்பதை இப்பேர்தே நாம் கணித்தால் அது தவறாகவும் முடியலாம்.

இங்கிலீஷ்காரர்கள் தாங்கள் சென்ற இடமெல்லாம் எவ்வாறு கிரிக்கெட் மட்டையையும், பந்தையும் கொண்டு சென்றார்களோ அவ்வாறே சமீபகாலத்தில் இந்தியர்கள் குடியேறிய இடங்களுக்கெல்லாம் ஹாக்கியைக் கொண்டு சென்றார்கள். கிழக்காபிரிக்கா, கென்யா, மலேஷியா ஆகிய நாடுகள் இதற்கு உதாரணங்கள். கென்யா சார்பாக இந்தியாவில் ஆடிய ஹாக்கி கோஷ்டியில் இந்தியர்களே பெரும்பான்மையினராய் இருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. இன்னும் தெளிவாகச் சொல்லப் போனால் இந்தியா, கென்யா ஆகிய இரு கோஷ்டிகளிலும் இருந்த விளையாட்டு வீரர்கள் பெரும்பாலும் பாஞ்சால "சிங்" குபளேயாகும். இந்தியக் கோஷ்டியைவிட கென்யா கோஷ்டியில்தான் இந்தபஞ்சாபியசிங்குகள் அதிகமாய் இருந்தனர்.

1947-ம் ஆண்டு முதல் இந்தியாவிலிருந்து சென்ற ஹாக்கி வீரர்கள், கென்யாவை எல்லா ஆட்டங்களிலும் சுலபமாகத் தோற்கடித்து வந்தனர். ஆனால் வெகு சீக்கிரத்தில், 1956-ம் ஆண்டு மெல்போர்ன் ஒலிம்பிக்கில் கென்யா ஹாக்கி கோஷ்டி பிரவேசித்தது. அதே சமயம் 1962-ம் ஆண்டு ஜாகர்த்தா ஆசிய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொண்ட உலக சாம்பியன் பாகிஸ்தானும், இந்தியாவும் கென்யாவில் தோற்கடிக்கப்பட்டன என்பதிலிருந்தே அந்த நாட்டில் ஹாக்கி விரைவாகவும். வியக்கத்தக்க வகையிலும் முன்னேறியிருப்பதைக் காணலாம்.

ஆசியா, ஆபிரிக்கா, ஆஸ்திரேலியா, ஐரோப்பா ஆகிய நான்கு கண்டங்களில் ஹாக்கி பிரபல்யம் அடைந்திருக்கிறது. அமெரிக்காவில் இல்லை. அடுத்த ஒலிம்பிக்கில் உலக சாம்பியன் பட்டத்தைச் சுவீகரிக்கப் போவது ஒரு ஆசிய நாடா அல்லது ஆபிரிக்கநாடா என்ற சந்தேகத்தைக் கென்யா போன்ற நாடுகள் கிளப்பி விட்டிருக்கின்றன.

★

## இருதிருத்த மசோதாக்கள்

சோஷலிஸத்தைவிட, ஜனநாயகம் என்ற வார்த்தையில் அதிக பற்றுக்கொண்டவர்கள், சென்றவாரம் இந்தியாவில் இரண்டுதடவை ஜனநாயகம் தப்பிப் பிழைத்தது என்று தான் கூறுவார்கள்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 17 வது திருத்த மசோதாவுக்கு ஏற்பட்ட இயற்கை மரணமும், 18 வது திருத்த மசோதா சாகடிக்கப்பட்டதுமே அந்த இரு சந்தர்ப்பங்களாகும்.

நிர்வாக யந்திரம் இந்த இரு மசோதாக்களின் மூலம் நீதிமன்றத்துக்குச் சவால் விட்டது. "என் விஷயத்தில் தலையிடாதே; நம் இருவருக்குமிடையே ஒரு வேலி அமைப்போம்" என நீதிமன்றத்துக்கு அது எச்சரிக்கைவிடுத்தது.

17-வது திருத்தச் சட்டம், ராஜ்யங்களின் நிலச்சீர்திருத்தச்சட்டத்தில் நீதிமன்றத்தின் உதவியை யாரும் அணுகமுடியாமல் செய்யப்படவிருந்தது.

18-வது திருத்தச்சட்டம், அவசர காலத்தின் அடிப்படையில் மக்களின் அடிப்படை உரிமையைப் பறிக்க ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிக்கவிருந்தது. எனினும் ஒன்று தற்கொலைசெய்துகொண்டது; மற்றது சாகடிக்கப்பட்டது.

17-வது திருத்த மசோதாவை சட்ட மந்திரி திரு. சென் லோகசபையில் கொண்டுவந்தபோது, போதுமான ஆதரவு அதற்குக் கிடைக்கவில்லை. வெளியிலுள்ள அங்கத்தினர்களை மணியடித்துக் கூப்பிட்டு மீண்டும் வாக்கெடுப்புக்கு விடவேண்டும் என சட்ட மந்திரியும், மற்றும் சில அங்கத்தினர்களும் கோரினர். ஆனால், "என்ன விளைவு ஏற்பட்டாலும் சபையின் பாரம்பரியத்தைக் காப்பாற்றியே தீருவேன்" எனக்கூறிய சபாநாயகர் அதை நிராகரித்து விட்டார். தம்மைப் பொறுத்தவரை அவர் பாராளுமன்ற ஜனநாயக சம்பிரதாயத்தைக் காப்பாற்றி விட்டார்.

இந்தியா சோஷலிஸ திட்டத்தின் அடிப்படையில் தனது முன்னேற்ற லஷ்யத்தை வகுத்துக்கொண்டிருக்கிறது. இதன் ஒரு அம்சமாகவே நில உச்சவரம்புச்சட்டம் ராஜ்யங்களில் இயற்றப்பட்டிருக்கிறது. நீதிமன்றம் இதை உடைத்தெறிய வாய்ப்பளிக்கக் கூடாது என்பதற்காகவே 17-வது திருத்தம் வந்தது. ஆயினும், தற்போது இல்லாவிடினும், பார்லிமெண்டின் அடுத்த கூட்டத்திலாவது அது புனர் ஜன்மம் எடுக்குமென்பதை லோகசபையின் பழைய வரலாறு உணர்த்துகிறது. இங்கிலையில் சுதந்திரா கட்சி போன்றவைகளுக்கு இது தற்காலிக சாந்தியையே அளிக்கும்என்பதில் சந்தேகமில்லை.

ஆனால் 18-வது திருத்தத்துக்கு பார்லிமெண்டிலும், வெளியிலும் பலத்த எதிர்ப்பு இருந்தது வாழ்க்கையில் பல துறைகளிலுமுள்ளவர்கள் இதற்கு எதிர்ப்புத்தெரிவித்திருந்தனர். அரசியலமைப்புச் சட்டப்படி மக்களின் அடிப்படை உரிமையைப் பாதுகாக்கும் விஷயத்தில் தீர்ப்பளிக்கும் அதிகாரம் நீதிமன்றத்திற்கிருந்தது. ஜனாதிபதிக்கு வரம்பற்ற அதிகாரம் அளித்து நீதிமன்றத்தின் தலையில் கை வைக்க எவரும் விரும்பவில்லை. எனவே, அரசாங்கம் பலத்த எதிர்ப்பை மதித்து, மசோதாவை வாபஸ் பெற்றுக் கொண்டுவிட்டது.

## வாரிசுப் பிரச்னை

ஹைதராபாத் நிஸாம் மன்னர் தமது பேரர் முகரம்ஜா இளவரசரை அடுத்த வாரிசாக நியமித்ததை இந்திய அரசாங்கம் அங்கீகரித்திருக்கிறது. இதை நிஸாமின் மூத்த புதல்வரும், பேரார் இளவரசரென அழைக்கப்படுபவருமான ஆஸம்ஜா ஆட்சேபித்திருக்கிறார்.

நிஸாம் மன்னருக்கும் அவரது மூத்த புதல்வர் பேரார் இளவரசருக்குமிடையே அவ்வளவாகப்பொருத்தம் இருக்கவில்லையெனப்பல ஆண்டுகளுக்கு முன்பே கூறப்பட்டது. முதல் புதல்வர் பெரிய செலவாளி. உலகிலேயே பெரும் பணக்காரர்களில் ஒருவரெனச் சொல்லப்படும் நிஸாம் மன்னரோ மிகவும் சிக்கனமானவர். முக்கியமாக இதன் காரணமாகவே புதல்வரின் மீது தந்தைக்கு நம்பிக்கையில்லாமல் போய்விட்டது எனவும் கூறப்பட்டது.

தந்தையிடமிருந்து போதுமான பணத்தைக் கறக்கமுடியாததால், பேரார் இளவரசர் வெளியிலே ஏராளமாகக் கடன் பட்டிருந்தார். அவரது கடன் பற்றி ஆராய நிஸாம் ஒரு கமிஷனை நியமித்தார். சுமார் 5 கோடி ரூபாய் கடனைச் செலுத்தியபின், இனி இளவரசருக்கு யாராவது கடன் கொடுத்தால் தாம் அதற்குப் பொறுப்பில்லை என நிஸாம் அறிவித்துவிட்டார்.

நிஸாமின் சொத்துக்கள்பற்றி பலவகையான வதந்திகள் உலவுகின்றன.

300 கோடி ரூபாய்க்கு மேல் அவருக்குச் சொத்து இருக்கிறதென்றும், இது தவிர கோடிக்கணக்கான ரூபாய் பெறுமதியான வைரங்களும் நகைகளும், இதரவிலைமதிப்பற்ற பொக்கிஷங்களும் ஹைதராபாத் அரண்மனையில் இருப்பதாகவும் சமீபத்தில் அறிவிக்கப்பட்டது. அவரது சொத்தின் முழுமதிப்பு சுமார் 2000 கோடி ரூபாய் வரை இருக்குமென ஒரு சமயம் மதிப்பிடப்பட்டது. இவ்வளவு சொத்திருந்தும் நிஸாம் மன்னர் தேசியப் பாதுகாப்பு நிதிக்குத் தாராளமாக உதவவில்லை என இந்திய அரசாங்கம் முன்பு வருத்தப்பட்டது. தாம் ஏழை எனக் கூறி சில லட்சம் ரூபாய்களை மட்டுமே அவர் பாதுகாப்பு நிதிக்கு அளித்தார். நிஸாமின் பேரர் முகரம் ஜா கேம்பிரிட்ஜில் கற்றவர். நிஸாமின் திரண்ட செல்வத்தை பிற்காலத்தில் அவரே நிர்வகிப்பார்.

நிஸாம் மன்னர், தமது புதல்வருக்குப் பதில் பேரரை வாரிசாக நியமித்தது போலவே, காலஞ்சென்ற ஆகாகானும் தமது வாரிசாக, புதல்வருக்குப்பதில் பேரரை நியமித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. அவரது புதல்வர் அலிகானும் பெரும் செலவாளி. உலக அரங்கில் உல்லாச புருஷராக விளங்கிவந்தார். தன்னைவிட்டு, தனது மகன் கரீம் இளவரசரை புதிய ஆகாகானாக தமது தந்தை நியமித்தது அவருக்குப் பிடிக்கவில்லை. எனினும் கடைசியில் இந்த ஏற்பாட்டை அவர் ஏற்றுக்கொண்டார். ஆகாகான் குடும்பத்திற்கும் ஏராளமான சொத்து உண்டு. உலகம் முழுவதும் ஆடம்பரமான அரண்மனைகளும், விலை உயர்ந்த பந்தயக்குதிரைகளும் ஆகாகானுக்குஉண்டு. இந்தத் திரண்ட செல்வத்துக்கு தற்போதைய ஆகாகானை இளவரசர் கரீம் அதிபதி. இந்தியாவில் ஆகாகான் அரண்மனையில்தான் மகாத்மா காந்தியை பிரிட்டிஷார்கடைசியாகச்சிறைவைத்திருந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இளவரசர் முகரம் ஜாவும், இளவரசர் கரீமும் வயதில் குறைந்தவர்கள். ஆனால் பெருஞ் செல்வத்தை நிர்வகிப்பவர்கள்.

## வெள்ளவத்தையில் அருணகிரிநாதர் விழா

— "திரு" —

அருணகிரிநாதர் தமிழ் இசை மன்றத்தினர் இரண்டாவது ஆண்டு விழாவை வெள்ளவத்தை சம்மாங்கோட்டார் ஸ்ரீ மாணிக்க விநாயகர் ஆலயத்தில் வெள்ளி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் கொண்டாடினர். விழாவிற்கு மூன்றுநாட்களிலும் பெருந்திரளான பெண்களும் ஆண்களும் கலைஞர்களும் சமுகம் கொடுத்திருந்தனர். அருணகிரிநாதர் தமிழ் இசைமன்றத்தினர் இந்த விழாவை சென்ற ஆண்டில் ஐந்து நாட்கள் நடாத்தினர். இந்த ஆண்டில் மூன்றுநாட்களுக்கு மட்டும் நடாத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டதன் காரணம் சங்கத்தின் அங்கத்தவர்கள் குறைவே எனத் தெரியவருகின்றது. இன்றைய சூழ்நிலையிலே மன்றங்களும் சங்கங்களும் முன்னேற்றம் அடைய வேண்டுமானால் மக்கள் ஆதரவு நல்கவேண்டும்.

அருணகிரிநாதர் தமிழ்இசை மன்றத்தினரின் நோக்கம் தமிழில் தான் இசைபாடவேண்டுமென்பதே. இக்குறிக்கோளின் காரணமாகத் தான் விழாவிற்குச் சமுகம் கொடுத்திருந்து மக்களை மகிழ்வித்த அத்தனை கலைஞர்களும் அநேகமாக தமிழில் இசைபாடினர்கள் போலும். மன்றத்தின் தலைவர் திரு. பா. தியாகராஜன் அவர்கள் தமது தலைமையுரையின் போது "ஆங்கிலேயர் தமிழ் பாட்டா பாடுகின்றார்கள்? ஆங்கிலப்பாட்டுத்தானே பாடுகின்றார்கள்" எனக் குறிப்பிட்டார். தலைவருடைய குறிப்பு தமிழில் பற்றுள்ள கலைஞர்களையும் மற்றும் சங்கீதப்பிரியர்களையும் சற்று சிந்திக்கவைக்கும் என்று எண்ண இடமுண்டு.

பிரபலமடைந்த கலைஞர்களும் பாடகர்களும், இளங்கலைஞர்களையும் பக்கவாத்தியகாரர்களையும் ஊக்குவித்து உற்சாகம் கொடுக்கவேண்டும். இப்படிச் செய்வதினால் நாம் நல்ல பக்கவாத்திய காரர்களை எதிர்காலத்தில் பார்க்க முடியும். எக்காரியத்திலும் உற்சாகம் இல்லாவிட்டால் அங்கே உயர்ச்சியும் முன்னேற்றமும் இல்லாது போய்விடும். இக்கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு அருணகிரிநாதர் தமிழ் இசைமன்றத்தினர் விழாவை ஏற்படுத்தியது யாவராலும் போற்றப்படவேண்டிய முயற்சி.

விழாக்களை அமைப்பதற்கு எவ்வளவாகப் பாடுபடுகிறார்கள் மன்றத்தினரும் சங்கங்களும் என்று ஒரு சிலரே அறிந்திருப்பினும் விழாக்கள் குறிப்பிட்ட நேரத்திற்கு ஆரம்பமாகி நிகழ்ச்சி நிரலில் ஒருவித மாறுதலுமின்றி நடந்தால் அது எவ்வளவோ வரவேற்கத்தக்க அம்சமாகும். இதற்கு விழா அமைப்பாளர்கள் மாத்திரம் பொறுப்பாளிகளாககாமல் கலைஞர்களும் ரசிகப் பெருமக்களும், உதவியும் ஒத்தாசையும் கொடுக்கவேண்டும்

அருணகிரிநாதர் தமிழ் இசை மன்றத்தின் விழா காளிமுத்து அரங்கில் ஆரம்பமாகியது. முதல் நாள் நிகழ்ச்சி திரு பி. கந்தசாமி கோஷ்டியினரின் நாதசுரத்துடன் ஆரம்பமாகியது அதையடுத்து செல்வி புஜனேஸ்வரி தில்லைநாதன், மாஸ்டர் சிரோமணி வேலாயுதர், திருமதி சரஸ்வதி பாக்கியராஜா முதல் திரு. அரிகேசநல்லூர் சுந்தரம், திரு. சி. இராஜசிங்கம் ஆகியோரின் பாட்டுடன் அன்றைய

(4-ம் பக்கம் பார்க்க)

# தொடர் யாத்திரிகன் கதை

"நீலாம்பரி"

கொழும்புப் பிரயாணிக்கோ ஆனையிறவை ரயில் தாண்டி விட்டால் அங்கு நீண்டு பரந்து கிடக்கும் கடல் வெளியையும் தண்ணென வீசும் வரட்சிக் காற்றையும் பனைமரச்சோலைகளையும் பார்த்த மாத்திரத்தே அவனுக்கு இருள் கலைந்து கிழக்கு வெளுக்கத் தொடங்குகிறது. விடி நிலவுக்காலமாயிருந்ததாலோ சாய்வானில் எழும் காலைப்பிறை இந்த அகண்ட வெளியை மயக்கும் கனவுலகாக்கி வைத்திருக்கும். ரயிலைவிட்டு அங்கேயேகுதித்து விடலாமா என்று அப்பொழுது மனம் ஏங்குகிறது. அமாவாசை இருளாயிருந்தால் தானென்ன, ரயில் பாதை ஓரம் இருள் மண்டிக் கிடக்கும் காடுகளின் நடுவே அங்கங்கு கொடிமரங்களிலும் செடிமரங்களிலும் ஆயிரமாயிரமாக மொய்த்திருக்கும் மின்மினிப் பூச்சிகள் அத்தனையும் ஒன்று சேர்ந்து உமிழும் ஒளிவெள்ளம் கூடத்தான் கண்களைப் பறித்துக்கொண்டு போய்விடுகிறது.

நாம் அமர்ந்திருக்கும் ரயில் பெட்டிக்குள்ளே தான் எத்தனை காட்சிகள் வாழ்க்கையின் ஒளிவடிவும் ஒலி அலையுமாய் நமது கண்களிலும் காதிலும் வந்து மோதுகின்றன! இவற்றையெல்லாம் பார்த்தும் கேட்டும் கொண்டே நீண்ட இராப் பொழுதைப் போக்கிவிடுகிறோம்.

கடல் வெளியைப்பார்த்தபடி பாட்டா ஒரு மூலையில் அமர்ந்திருக்கிறார். கொழும்பை அணுகிக்கொண்டிருக்கும் எங்கள் கோச்சில் இப்பொழுது கூட்டம் சேர்ந்து பெட்டி நிறைந்து வழிகிறது. பலபேர் இருக்க இடமில்லாமல் நிற்கிறார்கள். ஒருவன் ஓர் ஆசனம் முழுவதிலுமாக தன் சடலத்தை நீட்டி இன்னமும் படுத்த படுக்கையாகக் கிடக்கிறான். பயணச் சீட்டைப் பரிசோதிக்கும் அதிகாரி அங்குவந்தபோது பிரயாணிகள் அவரிடம் முறைப்பாடு செய்கிறார்கள். அவர் அவனைத்தட்டி எழுப்பி டிக்கெட் கேட்கிறார். அவனோ தன் தூக்கத்தைக் கலைத்துவிட்டமைக்காக ஆத்திரப்படுவதுபோல அவரை முறைத்துப்பார்த்துவிட்டு மறுபக்கம் புரண்டுபடுக்கிறான். டிக்கெட் பரிசோதகர் மற்றப் பிரயாணிகள் எல்லோரிடமும் அவர்கள் டிக்கெட்டுகளை வாங்கிப்பார்த்து முடித்துவிட்டு அடுத்த தங்கலில் ரயில் நிற்கும்போது அவனிடம் திரும்பி "எங்கே உன் டிக்கெட்டை எடு அப்பா" என்று சற்றுஅதிகாரதோரணையுடனே கேட்கிறார். அவன் அப்பொழுதுதான் எழுந்து ஏதேதோ கதை அளக்கிறான். டிக்கட்டை மட்டும் காண்பிக்கவில்லை. அவனிடம் டிக்கட் இருந்தால் அல்லவோ அதை எடுத்து நீட்டுவான். டிக்கட் பரிசோதிப்பவர் ரயில் மறுபடி அங்கிருந்து கிளம்புமுன்னமாய் அவனைத் தன்னுடன் அழைத்துக்கொண்டு இறங்கி ஸ்டேஷன் மாஸ்டரிடம் நடக்கிறார். அதுவரைகால்கடுக்க முட்டையும் முடிச்சுமாக நின்ற பெண்கள் அந்த ஆசனத்தில் அமர்ந்து சற்று ஆறுதலடைகிறார்கள்.

கொழும்பிலிருந்து சட்டையும் தொப்பியுமாக வந்த பல ரயில் கோச்சுகள் இதற்குள்ளாக நம்மைத் தாண்டிப்போய்விட்டன. ஒவ்வொன்றும் கனவேகமாகப் பறந்து போகின்றன. எத்தனை வேகத்தில் போனாலும் இந்த சட்டை தொப்பிக்காரர்கள் வீடுபோய்ச் சேர்வதற்குள்ளாக அவர்கள் குழந்தைகள் படுத்து உறங்கிவிடும். மறுபடி இன்னும் ஏழுநாள் ஒருவாரம் இவ்வாறு ஓடி அலைந்தபின்னர் தான் தங்கள் அருமைக்குழந்தையை தூக்கி அணைக்க அவர்களுக்கு ஓய்வு கிடைக்கிறது. 'இந்த ஞாயிற்றுக்கிழமை மாமா யார் அம்மா?' என்று அப்பொழுது குழந்தை தன் தாயிடம் கேட்டுக் கொண்டே அவர் கைச் சிறைக்குள்ளிருந்து தன்னை விடுவித்துக்கொண்டு ஓடுகிறது... தாய் என்ன சொல்வாளோ? 'அவர் தானடா கண்ணே, எங்கள் சூரிய நாராயணமூர்த்தி—உன் தந்தை' என்று கூறி அந்தச் சிறு பயலை அப்படியே வாரி எடுத்து அணைத்துக்கொள்ள மாட்டாளா?

ஒருவர்-யாரோ ஒருவர், வருகிறார். நம்மைநெருங்கி நம் ஊர் பெயர் போகுமிடம் வலம் எல்லாவற்றையும்நிரம்பிய அக்கறையுடனே விசாரிக்கிறார். தன்னைப் பற்றியும் ஆதியோடந்தமாக எல்லாம் சொல்கிறார். நமக்குள்ளே மிக நெருங்கிய உறவுப் பிணைப்பு உண்டாகி விடுகிறது. மத்தியில்உணவருந்தும் போது இருபேரும் ஒருவருக்கொருவர் கொடுத்து வாங்கி உண்டு மகிழ்கிறோம். ஆச்சு, இதோ அடுத்த ஸ்டேஷன் வருகிறது. ரயில் ஊர்ந்து சென்று நிற்கிறது. முன்னால் உட்கார்ந்திருந்தவர் எழுந்து "சரி அப்போ நான் போய்வருகிறேன்" என்று சொல்லிக் கொண்டே, கதவைத் திறந்துகொண்டு பத்திரமாக இறங்கிப் போகிறார். அவர் நம் பார்வையிலிருந்து மறைவதற்குள்ளாக வேறொரு புதிய பிரயாணியை அவர் இருந்த இடத்தில் பார்க்கிறோம். இந்தப் பேர்வழி சுருட்டுப் பற்ற வைக்க நம்மிடம் தீப்பெட்டி கேட்கிறார். கொடுக்கிறோம். உறவு வளர்கிறது. தீப்பெட்டியைத் திருப்பிக்கொடுக்காமலே ரயில் நின்ற மாத்திரத்தே இறங்கி நடந்துவிடுகிறார். இன்னும் சிலவேளை ஆனால் நாமும் கூட அப்படித்தானே இறங்கிப்பிரயாணத்தை முடித்துக்கொள்ளப் போகிறோம்.

பாட்டாவிடம் கேட்டால் வாழ்க்கையே ஒரு ரயில் பிரயாணம் தான் தம்பி என்று வேதாந்தம்பேசி அதற்குவியாக்கியானமும் சொல்வார். வாழ்க்கையை எதற்கு ஒப்பிடமுடியாது? ரயிலுக்கும் ஒப்பிடலாம், ரயில் பிரயாணத்துக்கும் ஒப்பிடலாம். பொதி சுமக்கும் கோவேறு கழுதைக்கும் கூட அதை ஒப்பிடலாம். இரண்டுமே அசைகிறது, நகருகிறது-பொதி சுமக்கிறது-முன்னேறிப் போகிறது. பார்க்கப்போனால் இந்த உலகிலுள்ள அசையும் பொருள் அசையாப்பொருள் அனைத்துமே அது அது தோன்றியது முதல் யாத்திரைசெய்துகொண்டுதானே வாழ்கின்றன, வளருகின்றன. ஒவ்வொன்றுக்கும் உதயமும் அஸ்தமனமும் ஒரு தொடக்கமும் முடிவும் தோற்றமும் மறைவும். ஆதியும் அந்தமும் அடியும்நுனியும், தளமும் கூரையும் உண்டு. இந்த இரண்டையும் தொட்டுக் கொண்டு நிற்பதுதான் அதனதன் வாழ்வும் வளர்ச்சியும் ஆகின்றது. இதற்குத்தான் உயரம், பருமன் நீளம் அகலம் காலம் வேகம், காற்று, விசை, காந்தம் ககனம் என்று என்னென்னவோ எல்லாம் சொல்கிறோம். இந்தப் பூமியே அது தோன்றிய காலம் முதல் தனித்துவமான ஓர் அண்டகோளமாக அந்தரபவனியில் நின்று தன்னைத்தானே சுற்றி திகிரி சுழன்று வளர்ச்சியடைந்துகொண்டு நாளாந்தமாக இவ்வாறு அதன் யாத்திரை மார்க்கத்தில் முன்னேறிப் போய்க் கொண்டுதானே இருக்கிறது. தொடக்கம்என்று ஒன்று இருந்ததைப்போல ஒரு முடிவும் என்றைக்கோ அதற்கு உண்டு. அதனைச் சார்ந்துள்ள அனைத்துக்கும் உண்டு.

(9-ம் பக்கம் பார்க்க)

# சிறுவர் பூங்கா

## பாலவீரன்

— வாகீஸ் —

இரவு சுமார் பத்துமணியிருக்கும். பாடசாலையில் நடைபெற்ற நாடகவிழாவுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தான், பாலன்.

சிறுவனாக இருந்தாலும் பாலன் துணிச்சல் மிக்கவன். இல்லாவிட்டால் சுமார் நான்கு மைல்களுக்கப்பாலுள்ள தனது வீட்டிலிருந்து, தனியாக நாடகம் பார்க்க வந்திருப்பானா?

அகால நேரமாதலால் தெருவிலே மனித நடமாட்டமே இல்லை. ஊர் உறங்கிக்கொண்டிருந்தது! நீண்டு வளர்ந்து, பாம்புபோல் வளைந்து வளைந்து சென்று கொண்டிருந்த தார்ரோட்டிலே அப்போது அவனைத்தவிர வேறுயாருமில்லை. மேலும் அன்று அமாவாசை. இருட்டைப் பற்றிக் கேட்கவா வேண்டும்? எங்கும் இருள்! இருள்!!

முதல்நாளிரவு பெய்த மழை வெள்ளத்துள், மகிழ்ச்சிக்கடலில் மூழ்கியிருந்த தவளையார் கூட்டம் எழுப்பிய 'இன்னிசை' காதைப் பிளந்ததோடன்றி, நிலவியிருந்த பயங்கர அமைதியைக் குலைத்து ஒருவித பயங்கர சூழ்நிலையையும் உருவாக்கிக் கொண்டிருந்தது.

அப்போதைய பயங்கர நிலைமை, பாலனுள்ளத்தை ஓரளவு திடுக்கிடத்தான் செய்தது.

பாலனுடைய சைக்கிளின் முன்விளக்கு, பாலன் 'பெடலை' வேகமாக மிதிக்க மிதிக்க பிரகாசமான ஒளிக்கற்றைகளைப் பரப்பி சூழ்ந்திருந்த கும்மிருட்டை துரத்தப் பிரிந்தது.

'சேம்பயன் மணல்' சுடுகாட்டை நெருங்க நெருங்க ஓர் இனந்தெரியாத பயம்-வேதனை உள்ளத்தில் பிறந்தது. உள்ளத்தில் தோன்றிய பயம் 'பெடலை' விரைவாக மிதிக்கச் செய்தது.

நேரம் ஆக ஆக சுடுகாடு சமீபித்துக் கொண்டு வந்தது. அப்போது...... சைக்கிளின் விளக்கிலிருந்து எழுந்த பிரகாசமான வெளிச்சம் எட்ட முடியாத தூரத்திற்கப்பால், கும்மிருட்டில் ஏதோ சிவப்பாக 'பளிச் பளிச்' என்று மின்னியது.

ஒருவேளை... கொள்ளிவாய்ப்... பிசா... அதற்குமேல் பாலனால் எதையுமே நினைக்க முடியவில்லை. நெஞ்சம் 'படபட' வென்றடித்தது! உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது. அணிந்திருந்த 'சேட்' மேலோடு ஒட்டிக்கொண்டது. பாலனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. வந்தது வரட்டும் என எண்ணிக் கொண்டு சைக்கிளைச் செலுத்தினான். பிரகாசமான ஒளியைக் கக்கிக்கொண்டு பாய்ந்தது, சைக்கிள்.

என்ன! மதகின் மீது யாரோ... ஆமாம் யாரோ இருவர் அமர்ந்திருந்தனர். அவர்கள் வாயிலிருந்த சுருட்டின் வெளிச்சம்... அடடா... இதைப்போய்...

சைக்கிள் அவர்களை நெருங்கிக் கொண்டிருந்தது. ஆயிற்று... இடைவெளி சுமார் பத்தடியிருக்கும்! ஆனால்...

அதற்குள் இருவரும் ரோட்டின் குறுக்கே பாய்ந்தனர். நிலைமையை எதிர்பாராத பாலன் 'டக்' கென்று 'பிரேக்'கை அழுக்கினான். மறுகணம் விளக்கு அணைந்துவிட்டது.

"தம்பி! சத்தம் வித்தம்..." கட்டையான, தடித்த குரல். தன்னருகே இருவர் நிற்பதை இருளிலும், நிழலாக அவன் கண்டான். சைக்கிளின் 'ஹாண்டிலை' ஒருவன் இறுகப்பிடித்திருந்தான். மற்றவன் கையில்... ஏதோ ஆயுதம் இருப்பதாக உணர்ந்தான்.

பாலன், செயலற்று உணர்ச்சியற்ற மரக்கட்டையாக சைக்கிளில் அமர்ந்திருந்தான்.

"தம்பி! கீழே இறங்கு..." இரண்டாவது மனிதன் சாதுவான குரலில் கூறினான்.

இசையால் கட்டுண்ட நாகம் போல் மறுபேச்சின்றிக் கீழேயிறங்கினான், பாலன்.

மறுகணம், அவன் முகத்தின் மீது வந்து விழுந்தது, ஒரு கைலேஞ்சி. அடுத்த கணம்...

மூச்சுத்திணறியது. எங்கோ பறப்பது போன்ற உணர்ச்சி! ஏதோ கூற நினைத்தான். ஆனால்... பேச முடியவில்லை. பின் நடந்தவொன்றுமே அவனுக்குத் தெரியாது.

ஏதோ கண்களைக் கூச வைத்தது. திடுக்குற்றுக் கண்களை விழித்துப் பார்த்தான். என்ன......

(தொடரும்)

# ஜெர்மனியின் குழந்தை எழுத்தாளர்

எரிக்காஸ்னர் என்பவர் பிரபல ஜெர்மன் எழுத்தாளர். அவர் குழந்தைகளுக்காக எழுதிய புத்தகங்கள் சர்வதேச பாராட்டுதல்களைப் பெற்றன. குழந்தைகள் படிக்கக்கூடாது என்று சொல்லக்கூடிய புத்தகங்களையும் இவர் எழுதினர். இவர் எழுதியுள்ள கவிதைகள் சிலவற்றில் மனிதவாழ்க்கையை அவர் அப்படியே படம் பிடித்துக்காட்டியிருக்கிறார். இவர் எழுதியவற்றை பலர் பாராட்டினர்கள். பலர் பழித்தார்கள். சில புத்தகங்களுக்காக இவருக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. இவருடைய சில புத்தகங்கள் வாங்கி கொளுத்தப்பட்டன.

இவருக்கு வயது 65 ஆயிற்றென்றாலும் இவருடைய எழுத்தில் இளமையின் தன்மையேதான் காணப்பட்டது. இவருடைய நகைச்சுவை மிகவும் உயர்தரமாக இருந்தது.

எரிக் காஸ்னர் டிரெஸ்டனில் பிறந்தவர். "லீப்ஸிக் டாக்ப்ளாட்" என்ற பத்திரிகையின் பிரபல ஆசிரியராகச் சேவை செய்தவர். தனது 27-வது வயதில் இவர் இலக்கியத்தில் டாக்டர் பட்டம் பெற்றார். பெர்லின் நகரின் வாரப்பத்திரிகையான "வெஸ்ட்பூனே" என்ற பத்திரிகையின் ஆசிரியர் குழாமில் இவர் இடம் பெற்றார். தனது வாசகர்களுக்கு அலுப்பு ஏற்படாதபடி எழுதுவதிலும் தன் கருத்தை தெரிவிப்பதிலும் இவர் மிகவும் திறமைசாலி. இவர் கவிதையிலுள்ள விசேஷத் திறமையைப் பெற இவர் வெகுகாலம் பாடுபட்டிருக்கிறார். இவர் இரவெல்லாம் பெர்லின் "காபி ஹவுஸ்"ஸில் உட்கார்ந்து அரும் பாடுபட்டு உழைத்ததின் விளைவாகவே இவர் இப்பெருமையை அடைய முடிந்தது.

இவர் வேலை செய்யுமிடம் நடுத்தெருவே! வீட்டில் இவர் வேலை செய்யும்போது பழங்கால "எம்பயர்" நாற்காலியில் உட்கார்ந்துதான் எழுதுவது வழக்கம். இவர் எழுதிய கதை கவிதைகள் எல்லாம் சேர்ந்து ஏழுதொகுதிகளாக வெளியிடப்பட்டிருக்கின்றன. இப்போதும் இவர் மிகச் சுறுசுறுப்பாகவே வேலைகளை செய்து வருகிறார். இவர் தன் டெலிபோன் இலக்கத்தை இரகசியமாகவே வைத்துக் கொண்டிருக்கிறார். ஜெர்மனியின் நவீன இலக்கிய சிருஷ்டி கர்த்தாவான இவர் பழங்கால மேசை நாற்காலியை விட்டுவிடவில்லை.

# வசந்த காவியம் பாடுவோம்!

— "வாணி" —

இன்னல் தொலைந்தது
இளவேனில் ஆயிற்று
புன்னகை கொள்ளுது
பூமி-அழகு
பூத்துக் குலுங்குது
பாராய்!

வாடை ஒழிந்தது
வருத்தமும் போயிற்று
வசந்த குதூகலம் பாராய்-
இன்பம்
வாய் விட்டழைக்குது
வாராய்!

நீலக் கருங்குயில் மாமரக்
கொம்பரில்
கானம் இசைக்குது
கேளாய்-வசந்த
கட்டியம் கூறுது
கேளாய்!

மெல்லிய மாருதம் முல்லை
மணத்துடன்
மேனியிற் சில்லென
வீசும்-ஆகா
பேவு சுகமிதம் பேசும்!

பச்சைப் பசேலெனப்
பாரகம் பூரித்துப்
பட்டொளி வீசுதல்
பார்பார்-நறும்
மொட்டுக்கள் பூப்பதும்
பார்பார்!

மண்ணக மங்கையின்
மணவறைப் பந்தரில்
கண்ணைச் சிமிட்டுமே
பூக்கள்-பசுங்
கிண்ணத்தே
னுண்ணுந்தேனீக்கள்!

வேனில் விழவிலே வெள்ளி
வெண் கும்பம்போல்
வானம் விளங்குது
திங்கள்-நிலவை
வாரி வழங்குது
பாராய்!

மழலைச் சிறுவர்கள்
மானினம் பட்சிகள்
மகிழ்ந்தே ஆடுதல்
பாராய்-மனம்
குழைந்து பாடுதல்
பாராய்!

ஆவிக்குள்ளே நிழல் ஆடும்
தமிழினில்
ஓவிய வண்ணங்கள்
தீட்டி-வசந்த
காவியம் பாடுவோம்
வாராய்!

பூம்புனல் ஆடுவம் பூக்
கொய்து சூடுவம்
போற்றிக்கொண்டாடுவம்
வேனில்-புதுமை
ஊற்றினை வாழ்த்துவம்
வாராய்!

ஞாயிறு கதை மலர்

# கற்பென்னும் திண்மை

பொ. சண்முகநாதன்

புவனா தங்கத்தால் கடைந்தெடுத்த சிலைபோன்றவள். மொழு மொழு என்று பளபளக்கும் மேனி. கறுத்துச் சுருண்ட சடைப்பின்னல். மயக்கும் கருவிழிகள். குத்தும் தனங்கள். அன்ன நடை. மின்னல் இடை...

அதிகம் வளர்ப்பானேன் செல்வாக்குள்ள குடும்பத்தில் பிறந்த பட்டதாரி செல்வராசனையே ஏழையிலும் ஏழையான புவனா உடல் அழகால் மயக்கி உள்ளத்தால் கவர்ந்து தன்னுடைமை ஆக்கிக்கொண்டாளானால் அவளது அழகைப்பற்றி இன்னுமா சொல்லவேண்டும்?

திருமணம் நடந்து இரண்டாண்டுகளின்பின் அந்தச் சம்பவம் மட்டும் நடைபெறுதிருந்தால்...!

எல்லாமே நாம் நினைப்பது போலவா நடைபெறுகிறது? அப்படி நடந்தால் உலகமே— வாழ்வே — எல்லாமே மனிதனுக்கு இன்பமயமாக அல்லவா இருந்துவரும்.

புவனா பிறந்த ஒரு மாதத்திலேயே அவளின் தகப்பன் காலனுக்கு இரையாகிவிட அவளுக்கு அன்னையும் தந்தையுமாக இருந்து அவளை வளர்த்து ஆளாக்கியவள் அவளது அருமைத்தாய் அன்னமே. எத்தனையோ தொல்லைகளையும் துயரங்களையும் துன்பங்களையும் ஏற்று — பசி பட்டினிகூடக் கிடந்து புவனாவைக் கவலை தெரியாதபடி வளர்த்துவிட்ட அன்னம் அவளை படிக்க வைக்கமட்டும் முடியாமல் போய்விட்டது.

என்ன செய்வது, அவளால் முடிந்தது அவ்வளவே!

அன்னம் தனக்காக வாழ்ந்த தியாக வாழ்வை, புவனா மறந்துவிடவில்லை. அதை நினைத்தாலே அவளுக்குக் கண்கள் கலங்கிவிடும்.

திருமணத்தின் பின் புவனா அன்னத்தை தன்னுடன் அழைத்துக் கொண்டு கணவனிடம் எவ்வளவு அன்பு— அக்கறை வைத்திருந்தாளோ அவ்வளவு அன்னையிடமும் வைத்திருந்தாள். சில படித்த பெண்களைப்போல் புது உறவு வந்ததும் பழைய உறவை மறந்து விட்டவளல்ல புவனா.

அன்று மருந்துக்காக மருத்துவமனை சென்ற அன்னம் நோமாகியும் திரும்பாததை அறிந்த புவனா செல்வராசனையும் அழைத்துக்கொண்டு மருத்துவமனை நோக்கிச் சென்றாள்.

மருத்துவமனைக்குச் சமீபமாக உள்ள நாற் சந்தியில் ஏராளமான மக்கள் கூட்டம் குவிந்து நிற்கவே, இருவரும் கூட்டத்தை விலக்கி உள்ளே சென்றனர். அங்கே—

அலங்கோலமான நிலையில் இரத்த வெள்ளத்தில் தலை வேறு உடல் வேறாக அன்னம் இறந்துகிடந்தாள். அருகிலே பொலிசாரால் சூழப்பட்ட ஒரு மோட்டார் வண்டி!

"ஆ..."

வாயடைத்துப் போனாள் புவனா. அதாவது அதிர்ச்சியால் ஊமையாகிவிட்டாள். பேசும் பொற்சித்திரமாகத் திகழ்ந்த புவனா பேசாத பொற்சித்திரமாக மாறிவிட்டாள்.

காலம் ஓடிக்கொண்டிருந்தது.

செல்வராசனுக்குப் புவனா ஊமையாகிவிட்டாளே என்ற கவலைதான். ஆனாலும் அவள் அவனுக்குச் செய்துவந்த பணிவிடைகளில், அன்பில், அக்கறையில் எதுவித மாற்றமும் இல்லை. அவை முன்போலவே நடந்து வந்தன. அவன் நினைப்பதை அவள் செய்து முடித்துவிடுவாள்.

"அழகு இருந்தால் பண்பு இல்லை. பண்பிருந்தால் அழகில்லை. இது இருந்தால் அது இல்லை. அது இருந்தால் இது இல்லை. இப்படித்தான் இக்காலப் பெண்கள். ஆனால் இவை இரண்டும் வாய்த்த புவனா உனக்குக்கிடைத்தும் இப்படியாகிவிட்டதே!" என்று ஒருநாள் செல்வராசனிடம் அவனது நண்பன் பூபாலன் ஆரம்பித்தான்.

"பூபால்! இதை ஒரு குறையென்று நான் கருதவே இல்லையடா! புவனா பேசாத் பொற்சித்திரமாகவே காலமெல்லாம் இருந்துவிடட்டும். அதனால் எனக்கு எந்தக் கவலையும் இல்லை."

இருந்தாலும் புவனா பேசிக்கொண்டு கலகலப்பாக இருந்தால் உனக்கு இன்னும் மகிழ்ச்சியாயிராதா?"

"இருக்கும் தான். அதற்கு நான் என்ன செய்வது? எனது தலையெழுத்து அப்படி!"

"தலையெழுத்தை நொந்து என்னவது? வைத்தியம் செய்து பார்த்தால் என்ன? இது என்ன பிறவி ஊமையா? இடையில் வந்தது தானே!"

செல்வராசன் பலரைஅணுகி ஆலோசனை கேட்டான். ஆயுர்வேத வைத்தியர்கள், டாக்டர்கள், மனோதத்துவ நிபுணர்கள் ஆகியோர்களையெல்லாம் கலந்து பேசினான்.

சிலர் முடியாது என்றனர்.

சிலர் 'பார்க்கலாம்' என்றனர்.

இன்னும் சிலரோ ஏதேதோ சொன்னார்கள்.

எவருமே திட்டவட்டமான பதில் சொல்லவில்லை. இதனால் செல்வராசனும் திட்டவட்டமான ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை.

பூபாலனின் சிபார்சின் பேரில் கொழும்பிலுள்ள ஒரு டாக்டரை செல்வராசன் அணுகினான். அவரோ சத்திர சிகிச்சையால் மாற்றமுடியும்போல் தெரிகிறதென்றும் ஆனால் நிச்சயமாக மாற்றித்தருவேன் என்று உறுதியளிக்க முடியாதென்றும் கூறினார்.

இதற்கும் செல்வராசன் சம்மதிக்கவில்லை. புவனா பேசாவிட்டாலும் பாதகமில்லை, வேறு விபரீதங்கள் ஏற்படக்கூடாது என்ற முடிவுக்கு அவன் வந்துவிட்டான்.

செல்வராசனிடம் அடிக்கடி வந்து போய்க்கொண்டிருந்த பூபாலனுக்கு நாளாக நாளாக புவனாவின் மயக்கும் அழகும் என்னவெல்லாமோ செய்தது. ஒருவித சபலம் அவனுக்கு-

'புவனா பேசமுடியாதவள்... செல்வராசன் அவளுக்கு வைத்தியம் செய்யும் எண்ணத்தையும் விட்டுவிட்டான்... அவள் எழுதப் படிக்கத் தெரியாதவள்... அப்படியானால் நான் அவளுடன்...'

பூபாலனின் மனதிலே ஓர் ஆசை.

ஆசையை எல்லாராலுமே அடக்கி வைத்திருக்க முடியாது. அது மட்டுமல்ல. அந்த ஆசை 'நண்பனின் உடைமை. இன்னொருவனுக்கு மட்டும் உரியவள்' என்பதையும் மறக்கச் செய்துவிடுகிறது.

செல்வராசனிடம் வந்திருந்த பூபாலனுக்கு செல்வராசன் அங்கு இல்லாததும் புவனா தனித்திருந்ததும் அவனது அந்த ஆசையை விசுபரூபம் எடுக்கச் செய்தது.

'செல்வராசன் வருவதற்கு இடையில்...'

பூபாலன் மெல்ல மெல்லப் புவனாவை நெருங்கினான்.

புவனா ஒன்றும் விபரீதமாக எண்ணவில்லை. 'எங்கள் குடும்ப நலனில் மிகுந்த அக்கறையுள்ள — அத்தானின் அருமை நண்பன்' என்ற எண்ணம் அவளுக்கு.

திடீரென்று மின்வெட்டும் நேரத்தில் அவனது கரங்கள் அவளைச் சுற்றிவளைக்க...

"ஆ..."

புவனாவின் அலறல். அதைத் தொடர்ந்து—

அவளது கரங்கள் தாறுமாறாகப் பூபாலனின் கன்னங்களைப் பதம்பார்த்தன. அதையும் தொடர்ந்து —

அவளது ஆத்திரம்— சீற்றம் யாவும் வார்த்தைகளாக வெடித்துப் பறந்தன. ஆமாம் வார்த்தைகளாகத்தான்!

பூபாலனுக்கு ஆச்சரியம்! அதிர்ச்சி! என்ன நடைபெறுகிறது என்பதையே அவனால் நம்பமுடியவில்லை. அங்கிருந்து பின்னங்கால்கள் பிடரியிலடிக்கும் வண்ணம் ஓட்டமெடுத்தான்.

இவ்வளவு நேரமும் மறைந்திருந்து இவைபெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த செல்வராசன் ஓடி வந்து புவனாவைக் கட்டித்தழுவினான்.

'இது அதிர்ச்சியால் ஏற்பட்ட ஊமை இது மாற வேண்டுமானால் அவளுக்கு முன் ஏற்பட்டதுபோல் அல்லது அதற்கும் மேலான ஓர் அதிர்ச்சி ஏற்படவேண்டும்.'

ஒரு மனோதத்துவ வைத்தியர் முன்பு சொன்னது செல்வராசனுக்கு இப்பொழுது நினைவுக்கு வந்தது. கற்பென்னும் திண்மை வாய்ந்த ஒரு தமிழ்ப்பெண், அந்தக்கற்புக்கு ஆபத்து ஏற்படும்போது அதிர்ச்சியடையத்தானே செய்வாள்.

(யாவும் கற்பனை)

# ஓர் அரசனின் காதல்

நாம் வாழும் இருபதாம்நூற்றுண்டில் காதலுக்காக முடிதுறந்த ஒரு மாமன்னர் அக்கதையைத் தாமே எழுதுகிறார்.

பதவி துறந்து இங்கிலாந்தின் சாதாரணபிரஜையாகிவிட்ட நான், அரசனாகிய என் தம்பியிடம் விடைபெற்றேன. இது நேரிடக்கூடியதல்ல. இது நடக்கக் கூடியதல்ல என்று பலமாகக் கதறி அழுதான் அவன் ... அது நடந்து விட்டது. எல்லாம் நடந்து முடிந்தும்விட்டது.

அதுவரை எனக்கு வாழ்க்கை இன்பமும் சுதந்திரமும் மிகுந்ததாய் இருந்தது. கடற்பயிற்சி, காலாட்படைப் பயிற்சி பெற்று இளமையும், துடிப்பும் மிகுந்த அரசகுமாரனாக வாழ்ந்தேன். இருப்பினும் ஏதோ ஒன்று தேவையாய் இருப்பதும், ஏதோ ஒன்று குறைந்திருப்பதும் நன்கு புலப்பட்டன. நியாயமற்ற கடமையும், பொறுப்பு இல்லாத சேவையும், அதிகாரமில்லாத ஆடம்பரமும் நிறைந்தவனாக நான் வாழவேண்டி இருந்தது

## விருந்திற்கு வந்தாள்

நான் ஓரிடத்தில் விருந்திற்குச் சென்றிருந்தேன். அங்கு கணவனுடன் திருமதி சிம்சன் வலிஸ் வந்திருந்தாள். கோமகனாகிய என்னிடம் அடக்கமாகவும் பணிவுடனும் பேசினாள் அவள். மறுநாள் சிம்மாசனத்தில் தந்தையும் தாயும் அமர்ந்திருந்தனர். நான் அருகில் நின்றேன். அப்போது அரசவைக்கு அறிமுகம் செய்யப்படவேண்டி வந்திருந்தோரில் ஒருவராக அவள் வந்திருந்தாள். அவள் அங்க அசைவும், அழகும், நடையும் மேன்மையும் என்னைக் கவர்ந்தன.

## யார் அவள்?

திருமதி சிம்சன் ஓர் அமெரிக்கப் பிரஜை. அவள் எப்போதும் குஷியாகக் காணப்பட்டாள். அழகும், அறிவும் அவளுக்குக்கவர்ச்சியை அளித்தன. எப்போதும் சுறுசுறுப்பாகவே காணப்பட்டாள். அவளுக்கு கதைகள் படிப்பதில் அலாதியான ஆசை இருந்தது. அரசியலைப் பற்றியும் அரசியற்பிரச்சனைகளைப் பற்றியும் நன்கு அறிந்திருந்தாள். தனக்குப் பிடிக்காததை வெளிப்படையாகக் கூறுவதோடு நில்லாது அதற்கான காரணங்களையும் ஆணித்தரமாக எடுத்துக்கூறும் அவள் குணம் என்னைக் கவர்ந்தது. என் கடமைகளையும் வேலைகளையும் அக்கறையோடு விசாரித்தாள் அவள். இப்படித்தான் எங்கள் 'விவகாரம்' ஆரம்பமாகியது.

## விவாகரத்துக்கோரினாள்!

முற்காலத்தில் அரசகுமாரனின் காதலைக் கவிஞர் பாடியிருப்பர். ஆனால் இப்போது அவனின் காதல் அரசியல் சட்டத்தின் எல்லைக்குள் அமைய வேண்டியதாகிவிட்டது. இந்நிலையில் திருமதி சிம்சன் விவாகரத்துக்கோரினாள். மதம் விவாகரத்தை அடியோடு வெறுத்தது. தீவிரமாக எதிர்த்தது! அரசனும் விவாகரத்தை எதிர்ப்போருள் முக்கியமானவனாய் இருந்தான். அவளுடன் வாழவேண்டுமாயின் அவள் விவாகரத்துச் செய்துதான் ஆகவேண்டும். என் தந்தையின் கொள்கைகளை மைந்தனாகிய நான் எதிர்க்க வேண்டிய சந்தர்ப்பம் உருவாகியது.

## தந்தை இறந்தார்

தம்பியின் திருமணம் வெகு சிறப்பாக நடந்தது. பெண் பயந்த சுபாவம் உள்ளவளாக இருந்தாள். அரண்மனையையும் பெருந்திரளான மக்களையும் கண்டு வெருட்சி அடைந்தாள். 'என் பிள்ளைகளில் பேர்டியைத் தவிர எல்லோரும் மணம் முடித்துவிட்டனர்' என்று தன் தினக்குறிப்பில் தந்தை எழுதினார். நோய்வாய்ப்பட்டிருந்த என் தந்தை சில தினங்களின் பின் இறந்தே போனார். அவர் என் திருமணத்தைக் காணவே இல்லை.

## முடிசூடாமன்னன்

நான் அரசனாவதை பிரித்தானிய மக்கள் மனதார வரவேற்றனர். வெற்றி விருதுகளுடன் ஆனால் தற்காலத்திய ஓர் அரசனாக இருப்பதையே நானும் விரும்பினேன். முடிசூட்டுவிழா வரவில்லை, ஆனால் பாராளுமன்றத்தில் சிம்மாசனப் பிரசங்கம் நிகழ்த்த வேண்டிய சந்தர்ப்பம் வந்தது. சிம்மாசனப் பிரசங்கம் முடிந்தபின் "ஓர் அரசகுமாரன் தன் முதலம் சிம்மாசனப் பிரசங்கத்தை நிகழ்த்தியுள்ளான். அவனிடம் அரசனின் சகலலட்சணங்களும் உள்ளன" என்று லண்டன் டைம்ஸ் பத்திரிகை எழுதியது.

## சந்திக்கு வந்தது

பிளாட்வின் அப்போது இங்கிலாந்தின் பிரதமராக இருந்தார். அரசன் விவாகரத்துச்செய்த பெண்ணை மணப்பது அவருக்குச் சற்றேனும் பிடிக்கவில்லை. அவரது மந்திரி சபையும் அதே கருத்தையே கொண்டிருந்தது. மதத் தலைவர்கள் வெளிப்படையாகத் தம் எதிர்ப்பைத் தெரிவிக்க ஆரம்பித்தனர். சில பத்திரிகைகள் விசேட தலையங்கங்கள் தீட்டின. எங்கள் விவகாரம் சந்திக்கு வந்தது; நான் தவித்தேன்.

## அனுமதேயக் கடிதம்

ஒருநாள் அனுமதேயக் கடிதம் ஒன்று வந்தது. அதில் நான் திருமதி சிம்சனை விட்டு விடவேண்டுமென்று எழுதி இருந்தது. பெரும் வேதனையையும் வெட்கத்தையும் மூன்று நாள் அடக்கிக்கொண்டேன். மூன்றும் நாள்மாலை அவளைச் சந்தித்தேன். கடிதத்தை அவளிடம் கொடுத்தேன். "உன்னை விட்டுவிடவேண்டுமாம்" என்று கூறினேன். அவள் அதிர்ச்சி அடைந்தாள். முகம் வாடிப் போயிற்று.

## பிரதமர் பேட்டி

மாட்சிமைதங்கிய அரசவரைப் பிரதமர் காணவிரும்புவதாக அறிவிக்கப்பட்டது. பிரதமரும்

(9-ம் பக்கம் பார்க்க)




சவுக்காரம் வாங்கும் போது
மில்க்வைற் நீல சவுக்காரம் என்று
கேட்டு வாங்குங்கள்.
இது ஒரு சிறந்த தயாரிப்பு.
மில்க் வைற்
நீல சவுக்காரம் ஒன்றே
உங்கள் சலவை வேலையை பூர்த்தி செய்கிறது.

உருவகக்கதை:

# அகம்பாவம்

— எஸ். எல். சவுந்தரநாயகம் —

கண்களுக்கும் கருத்துக்கும் ஒருங்கே விருந்தளிக்கும் மனங்கவர் மாலைவேளை.

பூத்துக்குலுங்கும் மென்மலர்கள் நிறைந்த பூம்பொழிலிலே—

பேடுகளும் குஞ்சுகளும் புடைசூழ பால்வண்ணப் பருவச்சேவலான 'வெள்ளையன்' பெருமிதத்துடன் பவனிவரலாயினன்.

வெள்ளையன் தனது பேரெழிலைத் தானே பார்த்துப் பார்த்து ரசித்தவனாகப் புளகாங்கிதமடைந்தான். அவன் அழகன் தான். ஆனாலும் ... இந்தப் பரந்த பாரிலேயே தனக்கு ஒப்பாரும் மிக்காருமில்லையென்பது அவனுடைய தீர்க்கமான முடிவு.

"கொக்கரோக்—கோ!கொக்கரக்...கோ! கொக்கரோக்—கோஓ!"

— மெல்லிய பொன்முலாம் பூசப்பட்ட பால்நிறச் செட்டைகளைத் தட்டிக் கூவத்தொடங்கினன் வெள்ளையன்.

அவ்வேளை —

வெள்ளையனுடன் 'இசைப் போட்டி'யிடுவதொப்ப மாங்கொம்பரிலிருந்த பூங்குயிலொன்றும் கானமழைபொழியத் தொடங்கியது.

"ஆஹா! ஆஹா! எத்துணை இனிமையான கானம்! தெவிட்டாத தேன் இசை; தித்திக்கும் தேவாமிருதம்! அடா, அடா!"

— கருங்குயிலின் கீதத்தைச் செவியுற்ற கோழிக் குமரிகள் மனந்திறந்து வாய்விட்டுப் பாராட்டவாரம்பித்தன.

தனதாருயிர்க் காதலிகளும் அந்தப்புரத்துச் சிங்காரிகளும் தன் முன்னிலையிலே — பிறிதொருவனைப் பாராட்டத் தலைப்பட்டது வெள்ளையனுடைய நெஞ்சில் வேலைப் பாய்ச்சினற் போன்று தைத்தது. அவனுக்குக் கட்டோடு பிடிக்கவில்லை.

"அடசட்! மூதேவிகளா! மூடுங்கள் வாயை. கழுவிய நெருப்புத்தணல் போன்ற அந்த ஆணழகனையா பாராட்டுகிறீர்கள்? அவனுடைய ஒப்பாரியையா தேவகானமென்று ரசிக்கிறீர்கள்? அவருடைய ஒண்டாப்புக்குக் கானம்வேறு; அதற்கு ரசிகைகள் வேறு. த்தூ! அவரும் அவரின் இசை ஞானமும்; நீங்களும் உங்கள் சுவைஞானமும்! த்தூ!"

— வெள்ளையன் கெக்கலித்துக் கிண்டல் பண்ணினன்.

குயிலனுக்கும் தன்மானமும் வீரமும் உண்டுதானே!

வெள்ளையனுக்கும் குயிலனுக்கும் வாக்குவாதம் தொடங்கியது...

ஒன்றின் குற்றத்தை மற்றது சுட்டிக்காட்டியும், தனது திறமையைத் தானே வானளாவப் புகழ்ந்தும் விமர்சித்தன.

குற்றங்கூறும் மரபும் விமரிசன நோக்கும் தண்டவாளத்தாலிறங்கிய புகைவண்டியாகத் தடம்புரண்டு, சுயபுராணங்களாக மாறி, வசைக்கவிகளாகப் பரிணமம்பெற்று, கீழ்த்தரமான அழுகிய வசனங்களாக நாற்றமெடுத்து ...

"டேய் கரியா! என் கவிதை (கூவுதல்) வெறும் சொற்கோபுரமல்லடா. இப்பூவுலகுக்கு விடிவளிக்கும் சக்திவாய்ந்த உயிர்க் கவிதையடா! நான் மட்டும் பாட (கூவ) வில்லையானல் பகலவன் உதிக்கமாட்டான். சூரியன் உதிக்காவிட்டால் நீ எப்படிப்பாடுவாயோ? புகழ் பெறுவாயோ? பிடிபந்தயம்! இன்றிரவு தொடக்கமாக நான் பாட (கூவ) வே மாட்டேன். அருணன் உதிக்கும் கெட்டித்தனத்தைப் பார்ப்போம்! எத்தனை நாட்கள் செங்குஞ்சரி, நீயும் உன்போன்ற போலிக் கவிஞர்களும் எனது காலடியில் வந்து வீழ்ந்து, கெஞ்சி மன்றாடி மன்னிப்புக் கோரினற்தான இந்தக் கவியரசன் பாடு (கூவு)வேன். இந்தக் கவிச்சக்கரவர்த்தி பாடி(கூவி)னுற்தான் கதிரவன் உதிப்பான். அப்படியல்லவென்று நீயும் உன்போன்றோரும் என்னிடம் வராமல், பாடி (கூவி) எல்லவனை எழப்பண்ணி இருளை விரட்ட முடியுமென்றாலும் செய்து பாருங்களேன் பார்ப்போம்! பெட்டைக்கோழிகளே கூவிப் பொழுதுவிடியாதென்றால், குயில் கூவியா பொழுது விடியும்?"

—சேவல் சவால் விட்டது.

குயில் சவாலை ஏற்றுக்கொண்டது.

சேவல், பேடுகள், குயில் அனைத்தும் அதனதன் உறைவிடம் சேர்ந்தன.

அண்டை அயலிலுள்ள அத்தனை சேவல்களையும் கூவவேண்டாமென்று வெள்ளையன் எச்சரிக்கை அறிவித்தல் விடுத்தான். சேவல்கள் வெள்ளையனின் கட்டளையைச் சிரமேற்கொண்டன.

வெள்ளையனுக்குத் தூக்கம் வரவேயில்லை... எவ்வண்ணம் வரும்?

பரம்பரை பரம்பரையாக— இலைமறைகாயாக — தங்களிடமிருந்துவரும் பகலவனை யுதிக்கப்பண்ணும் சக்தியை, மலைத்தீபமாக மாநிலம் முழுமைக்கும் காட்டுவதற்கு வாய்த்தவோர் மகத்தான சந்தர்ப்பத்தைக் கைநெகிழவிடமுடியுமா— என்ன? முதலாம் சேவல் கூவவேண்டியவேளை வந்தது. வெள்ளையன் கூவவில்லை. வெள்ளையனின் ஆக்ஞை பெற்ற வேறு சேவல்களும் கூவவில்லை. எப்படிக் கூவமுடியும்? வெள்ளையன்தான் கோழிக்குலத்தின் ஒப்பற்ற ஒரேயொரு தனிப் பெருந்தலைவனுச்சே!

இரண்டாவது தடவை...? வெள்ளையன் கூவவில்லை. தானும் தன் நண்பர்களும் கூவாவிட்டால் சூரியன் உதிக்கமாட்டானென்ற வெள்ளையனின் நம்பிக்கை விறுவிறென வளர்ந்து கொண்டேபோனது...

மூன்றும் முறை—? ஊஹூம்! வெள்ளையன் கூவவேயில்லை.

கிழக்கு வெளுக்கத் தொடங்கியது...

வெள்ளையனின் நம்பிக்கை ஆட்டங்காண ஆரம்பித்தது...

ஜெகஜோதியாக தன் பொற்கிரணங்களைப் பரப்பியவனாக — வழமைப்படி — சூரியன் உதிக்கத் தொடங்கினன்.

வெள்ளையனுக்கு 'திக்' கென்றது. ஆமாம்—

"சேவல்கள் கூவினலென்ன கூவாவிட்டாலென்ன சூரியன் உதித்தே தீருவான்; சூரியனை உதிக்கச் செய்வது சேவல்களிற் தங்கியிருக்கவில்லை" எனகிற யதார்த்த உண்மையை, அன்றுதான் வெள்ளையன அநுபவபூர்வமாக அறிந்தான்.

வெள்ளையனின 'வித்தியாகர்வமூலாம்' பூசப்பட்ட வீண் அகம்பாவம் மெய்யோன் முன் டனித்துளியாகியது...

# சித்திரா பூரணை

## சித்திரை மல்லிகை

— 9 —

நாகதீவிற்கு வந்த என்னை அரண்மனையிற் பேரிடி ஒன்று காத்திருந்தது. என்ன தெரியுமா...?

நாகர்களில் எயினர், ஒளியர், அருவாளர், பரதவர், மறவர் எனப் பல வகுப்பினர் இருந்தார்கள்; நாங்கள் மறக்குடியைச் சார்ந்தவர்கள்; என் தந்தை நாகதீவைப்பேரரசனுக ஆண்டபோது, சமந்த கூடத்தையும், அடுத்த பகுதிகளையும் அருவாளர் வகுப்பைச் சார்ந்த ஏரிலங்குருவன் என்னும் சிற்றரசன் ஆண்டான். அவன் எங்கள் விருந்தினனாக நாகதீவிற்கு வந்திருந்தான். நான் காவிரிப்பூம்படினத்திலிருந்து அரண்மனைக்குத் தாத்தாவோடு வந்தபோது, ஏரிலங்குருவனோடு என் தந்தையும், தாயும் அமர்ந்து உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

"என்ன, பீலி, ஒருதிங்களில் பெரிதும் ஆள் மாறிவிட்டாயே?..." என என் தாய் கேட்டபோது, எனக்குத் 'திக்' கென்றது.

"மகளே! இவர்தான் சமந்த கூடத்துமன்னர் ஏரிலங்குருவர்...!" எனத் தந்தை எனக்கு அவனை அறிமுகப்படுத்திவைத்தார்; என்னை அவன் பார்த்த பார்வை ஏதோபோல எனக்கு இருந்தது.

அன்று மாலை என் பெற்றோரும், தாத்தாவும் என்னிடம் வந்தனர்.

"பீலி! உனக்கும் வயதாகிவிட்டதம்மா! நாம் கண்மூடுவதற்குள் உனக்கு நல்ல இடத்தில் மணம் செய்து வைக்க விரும்புகிறோம், அம்மா!" என்றார், என் தந்தை.

"பீலி! எனக்கொரு பூட்டனைப் பெற்றுக்கொடு!" என்றார், தாத்தா.

நான் மௌனமாக விருந்தேன்; என் மௌனத்தைத் தங்களுக்குச் சாதகமாக அவர்கள் எண்ணிக்கொண்டனர்.

"சமந்தகூட மன்னனை உனக்குப் பிடித்திருக்கிறதா, பீலி...?"

சமந்தகூடமன்னன் விருந்தினனாக வரவில்லை; என்னைப் பெண்கேட்டு வந்திருக்கிறான் என்பதை நானுணர்ந்தபோது என்னிதயமே வெடித்துவிடும் போலிருந்தது.

மூவரையும் நிமிர்ந்து பார்த்தேன்; என்னையறியாமல் என் கண்கள் மாலைமாலையாக நீரைச் சொரிந்தன; மூவரும்பதறிப் போனார்கள்: அரண்மனையில் ஒருவித குறையுந்தெரியாமல் வளர்ந்தவள், நான். நான் அழுததே கிடையாது; என்னழுகை மூவரையும் பதற வைத்தது.

"பீலி! இதென்ன...?" என்றபடி என்தாய், என்னை அணைத்துக் கொண்டாள்; தாயின் அணைப்பிலிருந்து விடுபட்ட நான் என் பள்ளியறைக்கு ஓடிச்சென்று, மஞ்சத்தில் வீழ்ந்து, 'விம்மி விம்மி' அழுதேன்.

— 10 —

நான் அவரைச் சந்திக்கு முன் துன்பம் என்பதையே கண்டதில்லை; நான் திரும்பிய பக்கமெல்லாம் அன்பே எனக் காககாத்திருந்தது; என்மீது தன்னுயிரையே வைத்திருக்குந் தந்தை; கண்ணிமை போல என்னைக் காக்குந்தாய்; என்னை எறும்பு கடித்தாலும் பதறிப் போகும்என் தாத்தா; என்மீது தன் அன்பை எல்லாம்சொரியும் என் சகோதரன்— இவர்களெல்லாம் எனக்குத் துன்பமென்பதை என்னவென்று அறியவிடவில்லை. அன்பின் பிடிக்குள் நான் வளர்ந்தேன்; நான் பருவமங்கையான போது இன்னொருவரும் அதே அன்பைத் தான் என்மீது வைத்தார்; அந்த அன்பு, வாழ்வில் நான் காணாத இன்பத்தையும் வாழ்வில் நான் அனுபவிக்காத துன்பத்தையும் தந்தது.

என்தாய் என் கூந்தலைவருடிவிட்டாள்.

"அழாதே, பீலி! நீ அழுவதைக் காண எனனாற்பொறுக்க முடியவில்லை!... ஏன் அழுகிறாய், பீலி?..."

தாயின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு கதறு கதறென்று கதறினேன்.

"அம்மா, என்னை மன்னிப்பாயா?..."

"என்ன, பீலி! என்ன கூறுகிறாய்?..."

மன்னிப்பு என்ற வார்த்தை என்னைப் பொறுத்த மட்டில் மதிப்பு வாய்ந்ததாக இருந்தது; ஏனெனில், 'மன்னிப்பு' என்ற வார்த்தையை என்தாய் என்னிடமிருந்து ஒருபோதும் கேட்டறியாள்.

எப்படியாவது உண்மையைக் கூறித்தானே ஆகவேண்டும். உண்மையைக்கூறினேன்; கழிக்கானற் சோலையில் அவரைக் கண்டதைக் கூறினேன்; அவரைக் கந்தர்வமணம்செய்து கொண்டதைக்கூறினேன்; இன்னும் ஒன்பது மாதங்களில் தாயாகப்போகும் அச்செய்தியும் கூறினேன்.

என்தாய் இடிந்தேபோனாள்.

"பீலி...!" என்றழைக்கமுடிந்ததே தவிர வேறொன்றும் அவளாற் பேசமுடியவில்லை; மெதுவாக எழுந்து வெளியே சென்றாள்.

சேதி அறிந்த தந்தை குதித்தார்; துள்ளினார். என் தாத்தாவை ஏசினார். "மாமா! பீலியை அழைத்துச் சென்று நீங்கள் எனக்குத் தேடித்தந்த மானக்கேட்டைப் பார்த்தீர்களா...? நாட்டிற்குள் தலை காட்டாது செய்துவிட்டீர்களே ..."

— 11 —

மஞ்சமே சதம் என்று நான் கிடந்தேன்; என் அறையை விட்டு வெளிவருவது மிகவும் குறைவானது; இருந்துவிட்டு எப்போதாவது குண்டலினியுடன் பழைய கடற்கரைக்குச் செல்வேன்; ஆர்க்குமலைகடல் முன்பு எனக்கு இன்பத்தைத் தந்தது; திரை தவழ்பறவைகள் என் கண்களுக்கு முன்பு இன்பத்தைத் தந்தன; நெடு மணற்குன்றுகள் என் கால்களுக்கு முன்பு இதந்தந்தன—

— "விஷ்ணு" —

இவையெல்லாம் இப்போது எனக்குத் துன்பத்தையே தந்தன.

என் பெற்றோர் என்னாற் பெரிதும் கவன்றனர். என் தாய் என்னைத் தேற்றுவாள்; என் தந்தையோ என்னுடன் பேசுவதேயில்லை; தமையனே என்னை அருவருப்போடுபார்த்தான்; தாத்தா எனக்காக இரக்கப்பட்டார்; தாத்தாவின் கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு அழுதுதீர்ப்பேன்— எடுத்ததெற்கெல்லாம் அழவேண்டும் போலிருந்தது.

நல்ல நாள் பார்த்து என் தாத்தாவும், சில தூதுவர்களும் சோழநாட்டிற்குச் சென்ற

## ஞாயிறு கதை மலர்

"பதறாதே வளவனே! சோழர்கள் சொல் தவறாதவர்கள்! சோழ இளவரசனைப் பீலிக்கு எப்படியாவது மாலையிடச்செய்வேன்!... பீலிமேல் நீ வைத்திருக்கும் அன்பிலும் என் பேத்திமேல் நான் வைத்திருக்கும் அக்கறை பெரிது...!" என்றார், என் தாத்தா.

"சமந்த கூட மன்னனுக்கு வாக்களித்துவிட்டேனே, மாமா? இப்போது அவனுக்கு என்ன சொல்லுவேன்?... அருவாளர்கள் பொதுவாக முன்கோபக்காரர்கள்!... ஏரிலங்குருவனோ எதற்குந் துணிந்தவன்...!"

"உண்மைக் காரணத்தைக் கூறுவதால் நமக்கே அவமானம் ... பீலிக்கு விருப்பமில்லை என்று கூறி அனுப்பிவை!"

தந்தை அப்படியே சமந்த கூட மன்னனுக்குக் கூறினார்; ஏரிலங்குருவன் கொதிப்படைந்தான்.

"நாகநாட்டுமன்னரே! என்னை ஏமாற்றிவிட்டீர் என்பது மட்டுமல்ல அவமானப் படுத்தியும் விட்டீர்!... தமக்குக் கிடைக்காத பொருளைப் பிறருக்குக் கிடைக்கவிடமாட்டார்கள் அருவாளர்கள் என்பதை நினைவுவைத்திருங்கள்...!" என்று கூறிச்சென்றான்.

னர்; சென்ற கையோடு திரும்பியும் வந்தனர்; சோழநாட்டைப் போர்க்கார் மேகங்கள் சூழ்ந்துவிட்டனவாம். பாண்டியரும், சேரரும் ஒன்றாகக்கூடிச் சோழநாட்டை ஏப்பம் விடக்காத்திருந்தனர். அதனால், மணவினைப் பேச்சை ஆரம்பிக்கச் சோழமாமன்னர் சேட்சென்னி நலங்கிள்ளி தயாராகவில்லை; போர் முடிந்ததும் மணவினைப் பேச்சை ஆரம்பிக்கலாம் என்று கூறிவிட்டாராம். நானும், சோழ இளவரசரும் காதலர்கள் என்பதைச் சோழமன்னர் அறியார்; அதைத் தாத்தாவும் கூறவில்லை. மேலும், காரியாற்றுப் போர்க்களத்திற்குப் படை நடத்தி என் இளவரசர், பாண்டியரை எதிர்க்கச் சென்றுவிட்டதாயும் அறிந்தேன்.

இவற்றை அறிந்த நான், 'குலுங்கிக்குலுங்கி' அழுதேன்; என் நிலைகண்டு பலர் கண்ணீர் வடித்தனர்; 'நானேன் பிறந்தேன்?' எனவும் சில தடவைகள் எண்ணிக்கொண்டேன்.

'சோழ இளவரசர் போர்க்களத்திற்குச் சென்றதால் என்னையும் மறந்து விடுவாரோ' என்று என்னுள் எண்ணம் கிளைவிட்டது; ஏனெனில், பாண்டியர்மேல் அவர் வைத்திருந்த வன்மத்தைப் பல தடவைகள் நான் உணர்ந்திருக்கிறேன்.

(2-ம் பக்கம் பார்க்க)

அழகிய பெனியன் கால்மேஸ் !!
"லைடன்"
தயாரிப்பு
யாழ்ப்பாணத்தில் உற்பத்தியாகின்றன

LEYDEN

பல தினுசுகள்! பல அளவுகள்!! எங்கும்கிடைக்கும்
இன்றைய தேவை: சுதேசிப்பொருள் ஆதரவு
அதற்கு வழி 'லைடன்' பெனியன்கள் கால்மேஸ்களை அணிவதே.
உறுதியிலும் உயர்ச்சியிலும் மேனாட்டு பெனியன்களையும், கால்மேஸ்களையும் மிஞ்சியது 'லைடன்' பெனியன்களும், கால்மேஸ்களும்
தொழிற்சாலை 7, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# ஓர் அரசனின் காதல்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

வந்தார். சுற்றிவளைத்து அழகாகப் பேசினார். முடி சூட்டுவதற்குமுன் நான் மணம் புரிய வேண்டும் என்றார். திருமதி சிம்சன் வலிஸ்ஸை நான் விட்டுவிடவேண்டும் என்பதையும் சொல்லி வைத்தார். மனம் களைப்படைந்தது. வெறுப்பும் வேதனையும் நிறைந்திருந்தது. காதல் வானில் புயல் மேகங்கள் சூழலாயின.

### திருமணமா? மணிமுடியா?

மீண்டும் பிரதமர் என்னைக் காணவந்தார். அவர் எனக்கு மூன்று வழிகளே இருப்பதாகக் கூறினார்.

நான் வலிஸ்ஸை விட்டுவிட வேண்டும்.

மந்திரிசபையின் முடிவை எதிர்த்து வலிஸ்ஸை மணம் புரியவேண்டும்.

நான் முடிதுறக்கவேண்டும்.

இரண்டாவது வழி நடக்க முடியாதது என்றும் மூன்றாவதை பலரும் விரும்பவில்லை என்றும் கூறினார். "ஆகவே அரசரே, நீங்கள் முதலாவது வழியைப் பின்பற்றுங்கள். அதுவே அடியேனின் விருப்பமும்" என்றார். நான் சிரித்துக்கொண்டே "எனக்கு ஒரு வழியையே விட்டிருக்கிறீர்கள். சிம்மாசனத்தில் இருந்தாலும் சரி இல்லாவிடினும் சரி, நான் அவளையே மணம் புரிவேன். அதன் பலாபலன்களைவரவேற்கிறேன். அவளை மணம்புரிய முடிதுறக்கவும் தயாராக இருக்கிறேன்" என்றேன். "விரைவில் உங்களுக்கு முடிவைத் தெரிவிக்கிறேனே" என்றேன்.

"உமது முடிவு அதுவாக இருந்தால், மாட்சிமை தங்கிய மன்னனே, நான் மந்திரிசபையைக் கலைப்பதைவிட வேறு வழியில்லை" என்றார் பிரதமர். சிரித்தபடியே அவரை வழியனுப்பினேன்.

### பிரிந்து போனாளே!

பத்திரிகைகளின் விஷமத்தனமான செய்திகளைப் படித்து அவள் மனம் நொந்துபோனாள். அவள் கவலைக்கு நான் காரணமாய் இருப்பதை உணர்ந்து வருந்தினேன். அவளுக்கு இங்கிலாந்தில் வாழப் பிடிக்கவில்லை. இங்கிலாந்தைவிட்டுப் போய்விட முடிவுசெய்தாள். அதற்குமுன் என்னைக் கண்டு "காதலின் பற்றுகளிலிருந்து என்னை விட்டுவிடுங்கள்" என்று கண்ணீர் மல்கக் கூறினாள். "என்னால் நீங்கள் முடியிழந்து போவதை நான் சற்றேனும் விரும்பவில்லை" என்றாள். அவள் பெருந்தன்மையை வியந்தேன்; மௌனமாய் இருந்தேன்.

### மாமியின் பரிவு

விமானத்தில் வலிஸ்ஸை ஏற்றிவிட்டு வந்த என் மனதில் பிரிவின் வேதனைபடர ஆரம்பித்தது. வலிஸ்ஸின் மாமியார் என்னைக்காண அப்போது வந்தாள். "நீங்கள் எப்போதுவேண்டுமென்றாலும், யாரை வேண்டும் என்றாலும் மணம் செய்யலாம். ஆனால் முடியை ஒருமுறை இழந்துவிட்டால்திரும்பப்பெற முடியாதல்லவா? என்று பரிவுடன் பேசினாள். அவளுக்கு ஆறுதல் கூற வேண்டி "என்னை விலகும்படி வற்புறுத்தினால் ஒழிய நான் விலகப்போவதில்லை. அப்படி அரச போகத்தைத் துறந்தாலும் ஒருவர் மீதும் வெறுப்போ, கோபமோ இன்றித்தான் விலகுவேன். என்னை நம்பலாம்" என்றேன். "நீங்கள் விலகக்கூடாது என்று நான் பிரார்த்திக்கிறேன்" என்று கூறி விடைபெற்றாள் அவள்.

### பெண்ணா போரா?

மக்கள், நான் மன்னனாவதை விரும்பினர், நான் வெளியில் செல்லும் போதெல்லாம் "கடவுள் அரசனைக் காக்கட்டும், அவன் மிகவும் நல்லவன்" என்ற கோஷங்கள் காதில் பட்டு தெறிக்காமலில்லை. "நீங்கள் ஒரு விரலை அசைத்தால் போதும், ஆயிரம் ஆயிரம் பிரஜைகள் உமக்காக ஆயுதம் தாங்கி எழத் தயாராய் உள்ளனர்" என்று நண்பர் ஒருவர் கூறினார். 'அவன் காதலிக்கும் பெண்ணை அவன் ஏன் மணம் புரியக்கூடாது?' என்று மக்கள் கேட்ட வண்ணம் இருந்தனர். என் காதல் காரணமாக ஓர் உள் நாட்டு யுத்தம் வருவதை நான் விரும்பவில்லை.

### பாசக்கயிறு அறுந்தது.

அமைதியுடனும், நம்பிக்கையுடனும், துக்கமும் மனக்கசப்பும் இன்றி இவ்வரசியல் பிரச்னைக்கு முடிவு கண்டேன். சிம்மாசனத்தைத் துறந்து விட முடிவு செய்தேன். நான் காதலித்த பெண்ணை மன்னனாக அல்ல சாதாரணப் பிரஜைகளுள் ஒருவனாக மணம்செய்ய எனக்கு உரிமையில்லை என்றால் முடி துறப்பதைத்தவிர வேறு வழி இருக்கவில்லை. முடி துறக்கும் பத்திரத்தில் நான் கை ஒப்பமிட்டேன். எனது கதிரையை என் சகோதரர்கள் சாட்சியம் இடுவதற்காக விட்டேன். அவர்கள் அமைதியாக சாட்சியமிட்டனர். இக் காட்சி என்னை உலுப்பியது. என் பரம்பரை என்று சொல்லக்கூடிய கயிறும் அறுந்து போய் விட்டது. இராச வழமைகள் என்ற இரும்புப்பிடியில் சிக்கிவிட்ட என் தாய் என் முடிவை மாற்றமுடியாது என்பதை உணர்ந்தாள். அமைதியுடன் என் முடிவை ஏற்றுக்கொண்ட அவள் முகத்தில் கவலையின் குறிகள் தோன்றின. பாசக்கயிறு அறுந்தது.

### முடிவை மக்களிடம் கூறினேன்

அரசன் என்ற பதவியிலிருந்து விலகும்போது தான் மக்கள் என் எண்ணங்களைப் புரிந்து கொள்வர் என்ற நம்பிக்கையுடன் விலகமுடியாது. ஆகவே வானொலியில் என் முடிவைமக்களிடம்கூறினேன்:-

"நான் இம் முடிவைச்செய்யும்போது நாட்டையோ, சாம்ராஜ்யத்தையோ மறந்து விடவில்லை. நான் நேசிக்கும் பெண்ணின் ஆதரவும் உதவியுமின்றி இப்பெரும் பொறுப்பைச் சுமப்பதென்பது என்னால் இயலவில்லை. ஆகவே நான் இம்முடிவைச் செய்தேன். இப்போது உங்கள் எல்லோருக்கும் ஓர் அரசன் இருக்கிறார் அவருக்கும் உங்களுக்கும் என் நல்லாசிகள். அரசனை ஆண்டவன் காப்பாற்றட்டும்" என்று கூறி முடித்தேன்.

### பிரிவு

வின்ஸ்டன் சேர்ச்சில் என்னிடம் விடைபெற்றார். அவர் கண்களில் நீர் ததும்பியது! "மறக்க முடியாத இச்சந்தர்ப்பத்தில் அவன் செய்தது சாதாரண விஷயமல்ல" என்ற பாட்டைமுணுமுணுத்தபடியே சென்றார். இப்போது இங்கிலாந்தின் பிரஜையாகிவிட்ட நான் அரசனாகிவிட்ட தம்பியிடம் விடைபெற்றேன். "இது நேரிடக் கூடியதல்ல! இது நடக்கக்கூடியதல்ல!" என்று பலமாகக்கதறி அழுதான் அவன். அது நடந்து விட்டது; எல்லாம் நடந்து முடிந்தும் விட்டது.

### எல்லாம்முடிந்துவிட்டது!

வின்சர் கோமகனைத் தாங்கிச்சென்ற கார் வேகமாக கோட்டையை விட்டுக்கிளம்பியது. கோட்டை சிறுத்துச் சிறுத்து மறைந்துபோவதைப் பார்த்த நான் காதலுக்காக நான் செய்த தியாகத்தை உணர்ந்தேன். காதல் என்ற புனித அன்பு அரசியல் ஆபத்துக்களை வென்றுவிட்டது தெளிவாயிற்று. கோட்டையைப் பிரிந்த நான் இனிமேல் அதனுள் வரவும் முடியாது என்பதை உணர்ந்தேன். கப்பல் புறப்பட்டது. பிரித்தானியாவின் அழகிய அலைமோதும் கரை இப்போது மறைந்து கொண்டிருந்தது. அவள் இருக்கும் பிரான்ஸ் நாட்டை நோக்கி வேகமாய் நகர ஆரம்பித்தது. என் உள்ளத்துள் பல வித உணர்ச்சிகள் அலைமோதின. இனம் தெரியாத ஒருவகைச் சிரிப்பு என் உதடுகளில் நெளிந்தது.

(ஓர் அரசனின் கதையிலிருந்து தமிழாக்கம்: 'நல்லூர் நடா')

# சிலம்புச் செல்வி

இளங்கோவினால் இயற்றப்பட்ட சிலப்பதிகாரத்தைத்தழுவியதே சிலம்புச்செல்வி. இந்த நாடகத்தின் நூலாசிரியர் தேவன். தேவன் அவர்கள் சிறந்தமுறையில் - சந்தர்ப்பத்திற்கேற்றவாறு வசனங்களையும் சொற்களையும் கையாண்டமை நாடகத்தை நல்லமுறையில் ஆக்கிக் கொடுத்தது சைவ மங்கையர் வித்தியாலயத்தினர்க்கு! இதனால் சைவ மங்கையர் வித்தியாலயத்தினர் தங்கள் வித்தியாலயத்திற்கே ஒரு பெரும் பெயரையும் புகழையும் தேடிக் கொண்டார்கள். இந்த நாடகத்தை எந்த நோக்கத்திற்காகத் தயாரித்தார்களோ அந்த நோக்கம் ஒரு சமயம் நிறைவேறாவிட்டாலும் ரசிகப்பெருமக்களுக்கு நல்லுணர்வொன்றை வழங்கிய தென்ற முறையிலாகுதல் வித்தியாலயத்தினர் நிச்சயமாகத் திருப்தி கொள்ளலாம். அவர்கள் பணி வளர்வதாக.

இந்த நாடகத்தை தயாரித்த பெருமை திருமதி ரத்தினதிக்கத்தையும், செல்வி வித்தியா கனகசபையையும் சார்ந்ததாகும். இவர்கள் ஆசிரியர்களாயிருந்துகொண்டும் இப்படியான ஒரு சரித்திர சம்பந்தப்பட்ட நாடகத்தை பொறுப்பேற்று சிறந்த முறையில் நடாத்தியதை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது. நடனங்களை ஆக்கி நிதானித்த திறமை செல்வி பாலசுந்தரி கனகசபையைச் சார்ந்ததாகும். சிலம்புச் செல்வியில் முதலாவது காட்சியில் கைலாயத்தில் சிவ - பார்வதி நடனம் மிகவும் சிறப்பாகவும், கண்ணைக்கவரக்கூடிய காட்சியாகவும் இருந்தது. இதை அடுத்து கோவலன் - கண்ணகி தம்பதிகளின் இன்ப நாட்கள், பூம்புகார் இந்திரவிழா, பாண்டியன் அரண்மனையில்கண்ணகிவாதாடல் முதலியநிகழ்ச்சிகள் ரசிகப்பெருமக்கள் உள்ளத்தை இலகுவில்விட்டகலா. பொதுவாக எல்லா நடிகர்களும்(46) தங்கள் பொறுப்புக்களையுணர்ந்து நடித்துள்ளார்கள். ஆனால் இறுதிக் கட்டத்தில், கண்ணகியாக நடித்த கோகிலவர்த்தனி சுப்பிரமணியம் உணர்ச்சிப்பெருக்கீட்டினால் சிறப்பாக நடித்தது எல்லோர் மனதையும் தொடுவதாயிருந்தது. சிலம்புச் செல்வி மறுமுறை மேடையேறினால் பார்க்கத்தவறியவர்கள் நிச்சயம் அந்தச்சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விடக்கூடாது என்று இப்பொழுதே சொல்லிவைக்கிறேன்.

—'திரு'

# யாத்திரிகள்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

புல்லாகிப் பூடாய்
புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப்
பறவையாய் பாம்பாகி
கல்லாய் மனிதராய்
பேயாய் கணங்களாய்
வல்லசுரராகி முனிவராய்
தேவராய்
செல்லா அநின்ற
வித்தாவர சங்கமத்து
ளெல்லாப் பிறப்பும்
பிறந்திளைத்தேனெம்பெருமான்

என்று இந்த உலகம் தோன்றிய காலம் முதலாகவுள்ள நெடுவழியில் நாம் செய்துவந்திருக்கும் யாத்திரையை நாம் அடைந்து வந்த வளர்ச்சியை, வாழ்ந்த வாழ்க்கையை மாணிக்கவாசக சுவாமிகள் எத்தனை தெளிவாக எடுத்துக் காட்டியிருக்கிறார்.

(தொடரும்)

# கலை அரங்கம்

## கல்கி எழுதிய
## 'பொன்னியின் செல்வன்'
## தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரும்

'கல்கி' எழுதிய 'பொன்னியின் செல்வன்' சரித்திரக் கதையை தமிழ், ஆங்கிலம் ஆகிய இருமொழிகளிலும் படமாக்கி வெளியிட பிரபல சினிமாநடிகர் எம். ஜி. இராமச்சந்திரன் முயற்சி எடுத்துவருகிறார். இந்தப் படத்தில் பத்மினி, சரோஜாதேவி ஆகியோர்





முக்கிய பாகத்தில் நடிப்பார்கள். மற்றும் எம். என். நம்பியார், அசோகன், மனோகர், ராமதாஸ், டி. எஸ். துரைராஜ் ஆகியோரும் நடிப்பார்கள். இப்படத்தில் பத்மினி இரட்டை வேடத்தில் நடிக்கிறார். புது நடிகை ஒருவரும் ஒப்பந்தம் செய்யப்பட்டிருக்கிறார். படத்தின் கதைக்கு சக்தி கிருஷ்ணசாமி வசனம் எழுதுகிறார். நட்சத்திரங்களுக்கு ஆங்கிலப் பயிற்சி அளிப்பதற்காக நிபுணர் ஒருவரும் அமர்த்தப்படுவார். தமிழர் பண்பாட்டை உலகம் அறியும் வகையில் இப்படம் ஆங்கிலத்தில் தயாரிக்கப்படும் என்பதுடன் இதில் முற்றிலும் கர்நாடக பாணியில் சிறிதும் ஆங்கில கலப்பின்றி சங்கீதம் அமைக்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது. இருமொழிகளிலும் எம். ஜி. ஆரே படத்தின் தயாரிப்பாளராகவும், இயக்குனராகவுமிருப்பார். இசை அமைப்பு எஸ். எம். சுப்பையா நாயுடுவிடம் விடப்பட்டிருக்கிறது. வர்ணத்தில் தயாராகும் இந்தப் படத்தின் வேலைகள் நெப்டியூன் ஸ்டூடியோவில் அடுத்தமாதம் தொடங்குமென்று தெரிகிறது.


சினிமாஸ் திரைகளில்
அடுத்த திரை விருந்து
எஸ். எஸ். ராஜேந்திரன் — விஜயகுமாரி
மற்றும் பலர் நடித்த
நானும் ஒரு பெண்
தென்னாட்டில் 125 நாட்களுக்கு மேல்
ஓடிய உன்னத தமிழ் திரை விருந்து
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
நிந்தாவூர் சினிமா (நிந்தவூர்) ராஜ்மகால் (கல்முனை) சந்திரா (கம்பளை)
மற்றும் 4 திரைகளில்



எம். ஜி. ராமசந்திரன்—பி. சரோஜாதேவி
நடித்த
பெரிய இடத்துப் பெண்

# 17வது சட்ட திருத்த மசோதா மீண்டும் விவாதிக்கப்படும்

## விசேஷ பார்லிமெண்டை கூட்ட ஏற்பாடு

புதுடில்லி, மே 2

17-வது சட்டதிருத்த மசோதாவை விவாதிக்க பார்லிமெண்டின் விசேஷ கூட்டமொன்று வருகிற 27 அல்லது 28-ம திகதி நடைபெறுமென பாராளுமன்ற விவகார மந்திரி திரு. சத்யநாராயண் சின்ஹா அறிவித்தார்.

இந்த விசேஷ கூட்டத்தில் காஷ்மீர் பற்றியும் விவாதிக்கலாம் என்றும் அவர் கூறினார்.

ஷேக்அப்துல்லாவுடன் நடைபெறும் பேச்சுக்கள் பற்றி பிரதமர் நேரு அறிவிக்குமுன் காஷ்மீர் விஷயமாக எதுவும் உறுதியாகச் சொல்வதற்கில்லை என்றும் மந்திரி குறிப்பிட்டார்.

பார்லிமெண்டுக்குத் தெரிவிப்பதற்கு முன் பிரதமர் நேரு எந்த முடிவும் வெளியிடக்கூடாது என அங்கத்தினர்கள் வற்புறுத்தினர். அங்கத்தினர்களின் கோரிக்கையைப் பிரதமருக்குச் சமர்ப்பிப்பதாக திரு. சத்யநாராயண் சின்ஹா கூறினார்.

—

### பத்தவத்சலத்துடன்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டங்கள் பற்றியும் குறிப்பிட்டார். சந்தேகநபர்களாகக் காணப்படுபவர்களைக் கைது செய்து 14 நாட்கள் எவ்வித விசாரணைக்கும் உட்படுத்தாமல் வைத்திருக வகை செய்யும் சட்டத்தினுல் எத்தனையோ இந்திய மகளுடன் இலங்கையர்களும் அல்லற்படுகிறார்கள் என்பதனையும் காணிகளை விற்கும்போது விற்பவர் தான் ஒரு இலங்கைப் பிரஜை என்பதனை நிரூபிக்க வேண்டுமென்ற சட்டம் பற்றியும் திரு. சிவசிதம்பரம் அவரிடம் குறிப்பிட்டார். இந்தியர் பிரச்னைக்கு விரைவில் தீர்வுகாண மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தும் படியும் திரு. சிவசிதம்பரம் திரு. பத்தவத்சலத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இலங்கையிலுள்ள தமிழ் மக்கள் இன்றைய அரசாங்கத்தின் ஒவ்வொரு கடவடிக்கையிலும் நசுக்கப்படுவது பற்றி திரு. சிவசிதம்பரம் குறிப்பிட்ட போது, தமிழ்நாடு முதலமைச்சர் இத்தகவலைக்கேட்டு வியப்பும் வருத்தமும் அடைந்தார். இலங்கைத்தமிழர்கள் அடையும் கஷ்டங்கள் பற்றி தமிழ்நாட்டு மக்களில் பெரும்பாலானவர்களுக்கு ஒன்றுமே தெரிவதில்லை என்று திரு. பத்தவத்சலம் வருத்தம் தெரிவித்தார்

REGAL — JAFFNA
NOW SHOWING
Daily 3Shows. Sats.&Suns. Four
TOKYO by NIGHT
(Tohoscope - Colour)
(ADULTS ONLY)

## வரி விளம்பரம்

**நன்றி நவிலல்**

வைத்திலிங்கம்: காலஞ்சென்ற திரு. முத்துசுவாமி வைத்திலிங்கம் அவர்களின் ஈமக்கிரியைகளில் பங்குபற்றியும், அனுதாபச் செய்திகள் அனுப்பியும், மற்றும் உதவிகள் புரிந்த நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் அவரது குடும்பத்தினர் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

—"ஈசுவரி வாசப்", இருபாலை, கோப்பாய். 272

**தொய்வு, நீரிழிவு**

குணப்படுத்த உத்தரவாதம். மந்திரிமார், அரசியற் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்ற விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். தொய்வுக்கு 10 நாள் மருந்து 12/50. நீரிழிவுக்கு 10 நாள் மருந்து 10/50.

வைத்தியர் பரிபூரணநந்தர், கைலாயபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

**கபிரியேல் தயாரிப்புகள்**

1. கபிரியேல் பெயின் ஒயில்
சகல நோவு, வீக்கம்,வாதம் எதையும் குணமாக்கும். இன்னும் மாடுகளுக்கேற்படும் மேற்படி ரோகங்களும் குணமாகும்.

2. கபிரியேல் ஒயின்மென்ற்
சகல அவியல், புண், கட்டு எதையும் ஆற்றும் ஒரே புண்களிம்பு.

3. கபிரியேல் ஸ்பெஷல் பாம்
தடிமன், தலையிடி, சந்துளி போன்ற எல்லா வேதனைகளையும் தணிக்கவல்லவிசேஷ பாம்.

தயாரிப்பாளர்கள்,
GABRIELS,Chunnakam. 273

**வாடகைக்கு**

நவீன வசதிகளுடன் கூடிய இரண்டு வீடுகள் வாடகைக்குக் கொடுக்கப்படும். நாவலர் வீதி - கஸ்தூரியார் வீதி சந்திசகு அருகாமையில். கலந்துகொள்க. 193, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். 266

**தேவை**

காஷியராகக் கடமையாற்றுவதற்கு பிணைப்பணம் கட்டக்கூடிய ஆங்கில அறிவுடைய ஒருவர் தேவை. மாதச்சம்பளம் ரூ. 150/- நற்சாட்சிபபத்திரங்களுடன் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

கலாசோதி இன்டஸ்ரீஸ், 160, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 584

## பிரியாவிடை

நீர்கொழும்பு, சனி

பெரிய தெரு மீசாத்தைச் சேர்ந்த நீர்கொழும்பு "மரியாயின் சேனையாளர்" உதவிக் கட்டளைக்குரு வண பிதா. எஸ். எம் விஜயரட்னம் சுவாமி இடமாற்றம் செய்வதையிட்டு நடைபெற்ற பிரியாவிடைக் கூட்டத்தில் ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்தனர். அக்குரவர் ஆற்றியுள்ள சேவைகளைப் பாராட்டும் முகமாக அன்னருக்கு ஒரு வாழ்த்துப் பத்திரம் அளிக்கப்பட்டது. அவரின் சேவை பற்றி திரு. கமிலஸ் விரிவான முறையில் தெளிவாக எடுத்துவிளக்கினர்.

—

## ஒரு டின் தண்ணீர் ஐந்து சதம்!

கண்டி, சனி

கண்டி நகரத்துக்கான தண்ணீர் விநியோகத்தை கண்டி மாநகர சபை கட்டுப்படுத்தியுள்ளதால், அங்கு புத்தரின் புனித தந்தங்களைப் பார்க்க வரும் ஏராளமானவர்கள் 5 சதம் கொடுத்து ஒரு டின் தண்ணீர் பெறவேண்டியிருக்கிறது.

என்றும் திரு. சிவசிதம்பரம் கூறினர்.

தி. மு. க. தலைவர்களில் ஒருவரான நாஞ்சில் திரு. கே. மனோகரனை உடுப்பிட்டி எம். பி. சந்தித்தபோது, இலங்கையில் தமிழ் மக்களும் இந்திய மக்களும் அடையும் துயரங்கள் பற்றி நாஞ்சில் மனோகரன் விரிவாகப் பேசினர். லோக் சபையில் தாம் இதுசம்தமாக விரைவில் தீர்மானம் கொண்டு வர முயற்சிப்பதாக அவர் உறுதியளித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்கள் பற்றி அறிவதில் தென்னிந்திய மக்களும்தலைவர்களும் காட்டிய ஆர்வம் தமக்கு மிக்க மகிழ்ச்சி அளித்ததாக திரு. சிவசிதம்பரம் என்னிடம் கூறினர்.

# "ஆறுதல்கூற குருமாருக்கு இடமளிக்கப்படுவதில்லை"

## கத்தோலிக்க மேதின விழாவில் பேச்சு

நல்லூர், ஞாயிறு

தொழிற்சாலைகளில் தொழிலாளர்களையும், மறியற்சாலைகளில் கைதிகளையும், ஆஸ்பத்திரிகளில் நோயாளிகளையும் போய்ப்பார்த்து ஆறுதல் கூற கிறிஸ்தவ குருமாருக்கு இடமளிக்கப்படுவதில்லை, என்று வணக்கத்துக்குரிய பிதா ஜேபனேசன் ஜில்லேரியர் கதீட்ரல் தேவாலயத்தில் நடைபெற்ற கத்தோலிக்க மேதின விழாவில் பேசுகையில் கூறினர்.

வணக்கததுக்குரிய பிதா ஜெபனேசன் ஜில்லேரியர் மேலும் தொடர்ந்து பேசியதாவது:

"தொழிலாளர்களுக்கிடையே கட்டுப்பாடும், கடமையுணர்ச்சியும், தாழ்மை உணர்வும், மிகவும் அவசியமாகும். கத்தோலிக்கத் தொழிலாளர்கள் தாம் வேலை செய்யும் இடங்களில் கட்டுப்பாடுடையவர்களாகவும், தாழ்மையும், சிநேகமும் கொண்டவர்களாகவும் வாழவேண்டும்.

கிறிஸ்தவ தொழிலாளர் எங்கு வாழ்ந்தாலும் தமது பக்தி மூலமும், நடத்தையின் மூலமும் கடவுளின் பார்வைக்கும், மக்களின் பார்வைக்கும் பரிசுத்தமானவர்களாக வாழவேண்டும்"

பாஷையூர் அந்தோனியார் தேவாலயத்திலிருந்தது அர்ச். சூசையப்பர் சுருபம் ஊர்வலமாக எடுத்துவரப்பட்டது. தேவாலயத்தில் விசேஷ ஆராதனைகள் நடைபெற்றன.

### வாபஸ் பெருவிட்டால்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

மன்றத்தில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்படும் போது அரசாங்கத்தின் நிலை என்ன என்பது புரிந்துவிடும் என்று அரசாங்க எழுதுவினைஞர் சங்கச் செயலாளர் திரு இ. பாலசுப்பிரமணியம் கூறினர். அரசாங்கத்தின் நடவடிக்கைகளைப் பொறுத்தே தமது சங்கம் மேற்கொண்டு நடவடிக்கை எடுப்பது பற்றி இறுதிமுடிவு செய்யுமென்றும் அவர் தெரிவித்தார்

தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களில் சிங்களம் படிக்காதவர்கள் தமது விபரங்களை எழுதுவினைஞர் சங்கத்திற்கு தெரிவிக்கும்படியும் திரு. இ. பாலசுப்பிரமணியம் கேட்டுள்ளார். சிங்களத்தேர்ச்சி பெருத தமிழ் பேசும் அரசாங்க ஊழியர்கள் அனைவரையும் ஓரணியின் கீழ் திரட்டி மொழியுரிமைக்குப் போராடவேண்டிய அவசியம் வந்துள்ளதாகவும் திரு. பாலசுப்பிரமணியம் கூறினர்.

அரசாங்கம் வழங்கிவரும் கட்டாய ஓய்வு உத்தரவுகளை எதிர்த்து எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றி தமிழரசுச் செயற்குழு இம்மாதம் 16, 17 திகதிகளில் கூடும்போது முடிவுசெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# முஸ்லிம்களின் போதனு மொழி:

## முஸ்லிம் எழுத்தாளர் சங்கம் முடிவு

கொழும்பு, சனி

"போதனுமொழிப் பிரச்னை இந்நாட்டின் முஸ்லிம் மக்களிடையே ஒரு நல்ல விழிப்புணர்ச்சியை உருவாக்கி வருகின்றது. மேலெழுந்தவாரியாக இப்பிரச்னையை ஆராய்வதைவிட பொறுப்புணர்ச்சியோடும் தீர்கதரிசனத்தோடும் ஆராய்தல் அவசியமானது. என்று இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கத்தின் செயற்குழுவின் போதனு மொழிபற்றிய விசேட கூட்டத்தில் தலைமையுரை நிகழ்த்திய சங்கத்தலைவர் ஜனுப் எம். பி. எம். மாஹிர் குறிப்பிட்டார்.

1960—61-ம் ஆண்டுகளின் கல்வி அதிகாரியின் அறிக்கையிலிருந்து பெறும் புள்ளிவிவரங்களை அடிப்படையாகக் கொண்டு முஸ்லிம்களின் போதனுமொழி தமிழ் என்பது தேற்றம். இன்று முஸ்லிம் மாணவர்களுள் மிகப்பெரும்பாலானேர் தமிழ் மூலமே கல்வி பெறுகின்றனர். அதே வேளையில் முஸ்லிம் மாணவரின் பாடத்திட்டத்தில் சிங்கள மொழி ஓர் முக்கிய இடத்தைப் பெறல்வேண்டும்" என்று கூட்டத்தில் பேசிய ஜனுப் எம். எம். உவைஸ் கூறினர்.

"சிங்களத்தைப் போதனு மொழியாகக் கொள்வதன் விளைவாக முஸ்லிம்களுக்குள் தமிழ் சிங்கள முஸ்லிம்கள் வருங்காலத்தில் இஸ்லாத்தை முற்றாக மறந்து விடுவார்கள் என்று அல்ஹாஜ் வி. எம். சம்சுத்தீன் கருத்து வெளியிட்டார். "சிங்களத்தைப் போதனு மொழியாகக் கொண்டு கல்வி பயிலும் முஸ்லிம் வாலிபர்கள் சூழ்நிலையின் கெடுதிகளாலும், மத சம்பந்தமான புத்தகங்கள் சிங்களத்தில் இல்லாததினுலும் இல்குவாகவே பெரும்பான்மைச் சமூகத்துடன் இணைந்துவிடுவர். இதன் காரணமாக முஸ்லிம் தமது தனித்தன்மையை மாபெரும் பாரம்பரிய உணர்வுகளை இழப்பர்" என்று ஜனுப் ஐ. எல். எம். மஸ்ஹூர் தெரிவித்தார்.

"ஒரு பிள்ளையின் தாய்மொழியே அப்பிள்ளையின் போதனு மொழியாகவும் இருக்கவேண்டும் என்பது உள நிபுணர்களின் மகத்தான முடிவு. எனவே இந்த அடிப்படைத் தத்துவத்தை நாம் நோக்குங்கால், எமது முஸ்லிம்பிள்ளைகளின் தாய்மொழி தமிழாக இருப்பதால், எமது போதனு மொழியும் அம்மொழியிலேயே நடைபெறவேண்டும்" என்று திரு. ஏ. ஆர். எம். இறுஹாத் தெரிவித்துள்ள கருத்தும், ஸி. எம். இஸ்மாயில், எம். ஏ. கபூர், கவிஞர் அப்துல்காதர் லெப்பை, ஏ. யூ. எம். ஏ. கரீம், போன்றவர்களது அபிப்பிராயங்களும் கூட்டத்தில் விவாதிக்கபபட்டன.

கூட்ட முடிவில் "தமிழ் மொழியே ஈழத்து முஸ்லிம் மாணவர்களது போதனுமொழியாகவும், சிங்களம் கட்டாய இரண்டாவது மொழியாகவும் இருப்பதுடன், இஸ்லாமிய நெறிமுறையின்றும் பிறழாது வாழ்க்கை நடத்துவதற்காக அரபு மொழியும், சர்வதேசத் தொடர்புக்கான ஆங்கிலமும் உரிய முக்கியத்துவதோடு கற்றுக்கொள்ளவேண்டும் என்றும் இந்த அடிப்படையில் முஸ்லிம்களின் மொழிகள் சம்பந்தபபட்ட பிரச்னை தீர்க்கப்பட்டால் எதிர்கால முறையில் சமுதாயம் தனது தனித்தன்மையையும், கலாச்சாரத்தையும் பாதுகாத்துக்கொள்ள முடியும்" என்றும் இலங்கை முஸ்லிம் எழுத்தாளர் சங்கம் முடிவுசெய்துகொண்டது.

# பொக்காரோ உருக்காலைக்கு ரஷ்யா உதவும்

புதுடில்லி, மே 2

பொக்காரோ உருக்காலை விஷயமாக உதவி புரியரஷ்யா முன்வந்திருக்கிறது என இரும்புமந்திரி சுப்ரமண்யம் கூறினர். முதல்கட்டத்தில்15 லட்சம் டன் இது உற்பத்தி செய்யும் என்றும் இறுதியில் 40 லட்சம்டன் உற்பத்திசெய்யும் என்றும் மந்திரி குறிப்பிட்டார்.

இதுசம்பந்தமாக விரைவில் ரஷ்ய நிபுணர்கள் கோஷ்டி ஒன்று இந்தியா வரும் என்றும் இந்தக் தேசியத்திட்டத்தில் உதவிபுரிய முன்வந்ததற்காக அந்த நாட்டுக்கு நன்றி தெரிவிப்பதாயும் திரு. சுப்ரமண்யம் கூறினர்.

அமெரிக்கா, பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஜப்பான், இத்தாலி ஆகிய நாடுகளில் சிலரும் இவ்விஷயமாக உதவியளிக்க முன்வந்திருக்கின்றனர். இவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளும் அதே வேளையில் மேலும் அமைக்கப்படவிருக்கும் இவ்வித ஆலைகளுக்கு இந்த உதவி பயன்படுத்திக் கொள்ளப்படும் என்றும் திரு. சுப்ரமண்யம் தெரிவித்தார்.

—

### கூட்டரசாங்கம் பற்றி பிலிப்

கொழும்பு, சனி

ஏற்கனவே வெளியிடப்பட்டிருக்கும் ஐக்கிய முன்னணிக் கொள்கைகளை தற்போதைய அரசாங்கம் மேற்கொள்ளும் பட்சத்தில்தான் அரசாங்கத்துடன் ஒத்துழைப்பதுபற்றி ஆலோசிக்கப்படும் என்று கால்பேஸ் திடலில் நடைபெற்ற பிரமாண்டமான ஐக்கியமுன்னணியின் மேதினக் கூட்டத்தில் பேசிய திரு. பிலிப் குணவர்த்தன கூறினர்.

மேலும் திரு. குணவர்தன பேசுகையில் பண்டாரநாயக்கா காலஞ்சென்றதும் பதவிக்கு வந்த திரு. தஹநாயக்கா ஒரே தினத்தில் 10 மந்திரிகளுக்கு கல்தா கொடுத்திருக்கிற போது பிரதமர் ஏன் திருவாளர்கள் ஸி. பி. டி' சில்வா, மைத்திரிபால சேன ஞயக்கா ஆகியவர்களை வெளியேற்றக் கூடாதெனவும் கேட்டார்.

### மோதல் தவிர்க்கப்பட்டது

நல்லூர், சனி

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இரு மேதின ஊர்வலங்களுக்கிடையே நடைபெறவிருந்த குழப்பம் பொலிசாரினுல் தடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் ஸ்ரான்லிவீதி ஐந்து சந்தியில் குழப்பமான நிலை ஏற்படவிருந்தது. அப்பாதையில் வந்துகொண்டிருந்த பொலிஸ் அதிகாரி இந்த நிலையைத் தவிர்த்தார்.

—

### மூன்று மாதமாக பச்சையரிசி விநியோகம்

பளை, சனி

கடந்த மூன்றுமாத காலமாக பச்சிலைப்பள்ளிப் பகுதி மக்களுக்கு பளை தென் யாழ். யூனியன் வெள்ளைப் பச்சை அரிசியையே கூப்பனுக்கு வழங்கி வருகிறது. இப்பகுதியில் இக்காலத்தில் அதிக வெப்பமாக இருக்கிறது. வெள்ளைப் பச்சை அரிசியை மக்கள் தொடர்ந்து உண்பதால் பலவித நோய்களுக்காளாகி பலர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

—

### கைதிகளின் நாடகம்

நீர்கொழும்பு, சனி

நீர்கொழும்பு பாலிய குற்றவாளிகள் சிறைச்சாலையைச் சேர்ந்தவர்கள் அண்மையில் "காட்டு ராஜன்" எனும் நாடகமொன்றை வெகு சிறப்பாக நடத்தினர். கைதிகளினுல் நடித்துக்காண்பிக்கப்பட்ட இந்த நாடகத்தை நூற்றுக்கதிகமான மக்கள் கண்டுகளித்தனர். முன்னுள் யாழ்ப்பாணம் சென். பட்ரிக்ஸ் கல்லூரி மாணவரும்உபஅதிகாரியுமான திரு. டனிசியஸ் இந்த நாடகத்தில் சிறப்பாக நடித்திருந்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1964-ம் ஆண்டு மே மாதம் 3-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.